# உதயன்

சுடர் : 36 | கதிர் : 132 | புதன்கிழமை | பங்குனி 25 ஆம் நாள் 07 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 24 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


# அரசின் கழுகுப் பார்வைக்குள் அரச சார்பற்ற நிறுவனங்கள்!

**கொழும்பு, ஏப்ரல் 7**

**உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவும் இலங்கை அரசின் இறுக்கமான கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதேநேரம் வெளிநாடுகளிலிருந்து நிதிகளைப் பெற்றுச் செயற்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் மிகமிக இறுக்கமான நடைமுறைகள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மூலம் நேரடியாகக் கண்காணிக்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

23



"உந்தக் கழுகுப்பார்வையை புற்றுநோயை கொண்டுவாற எண்ணெய், பருப்பை இறக்குமதி செய்யேக்கையும் காட்டியிருக்கலாமே"

முச்சந்தி முரளி

## ரஞ்சன் சிறை செல்வதற்கு சஜித், சம்பந்தன் காரணம்!

மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டால் சபையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, ஏப்.7



எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுமே ரஞ்சன் ராமநாயக்கவை சிறைக்கு அனுப்பினர். ரஞ்சனின் வழக்கை ஜெனிவாவரை கொண்டு செல்

23

ஈஸ்டர் தாக்குதல்

## சூத்திரதாரிகள் விவரத்தை வெளியிட்டது அரசாங்கம்!

கொழும்பு, ஏப்.7

நௌப்பர் மௌலவி, ஹஜ்ஜுல் அக்பர் ஆகிய இருவருமே ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் எனப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

23

## வடக்கு மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்கள்!

### நேற்று 21 தொற்றாளர்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாணத்தில் நேற்று 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை, யாழ்ப்பாணம் மருத்துவமனைகளின் நோயாளிகள் சிலருக்கும், ஊழியருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் நேற்று 702 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 21 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவை

23

## மகனைத் தேடியலைந்த தாய் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை கடந்த 11 ஆண்டுகளாகத் தேடி வந்த தாய் ஒருவர் நேற்று சுகவீனத்தால் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் மத்தி கோப்பாயில் வசித்து வந்த கந்தவனம் பரமேஸ்வரி (வயது73) என்னும் தாயாரே சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இவரது மற்றொரு மகன் மாவீரர் என்ப

23

## தவறான முடிவெடுத்து யுவதி சாவு

யாழ்ப்பாணம், ஏப்.7

21 வயது யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இருபாலை மடத்தடியைச்சேர்ந்த இ.இனுசா (வயது-21) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

23

## வழுக்கி வீழ்ந்த கர்ப்பிணிப் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

வழுக்கி விழுந்ததால் பாதிப்புக்குள்ளான கர்ப்பிணிப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மானிப்பாய், கட்டுடையைச் சேர்ந்த ப.கிருசாந்தி என்பவரே

23

## பெட்டி வீழ்ந்து பெண் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.7

வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெட்டி ஒன்றை இறக்க முயன்றபோது, அது தவறி மேலே விழுந்ததில் ஏற்பட்ட பாதிப்பால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொக்குவில் கிழக்கு, பொற்பதியைச்

23

## கைபேசி விளையாட்டால் விபரீத முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.7

சுழிபுரம், பிளவத்தைப் பகுதியில் மாணவன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளான். கைத்தொலைபேசியில் தொடர்ச்சியாக விளையாட்டில் ஈடுபடும் இந்த மாணவன், அவனது தாய் கைத்தொலைபேசியை பறித்ததால் தவ

23





சௌபாக்கியம் உரித்தாகட்டும்!

அரச மற்றும் தனியார் துறையினருக்கு SLT Mobitel இடமிருந்து மனம் கவரும் Samsung Galaxy M01s.

1GB டேட்டா

மாதாந்த கட்டணம் ரூ.350/-

mPower

SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொடுப்பதை வாங்கிக்கொள்ளுங்கள் இதுதான் தற்போதைய நிலைப்பாடு!

## மனோ ஆவேசம்



**கொழும்பு, ஏப். 7**

**கொடுப்பதை வாங்கிக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டும் என்பதுதான் தற்போதைய அரசின் போக்கு. எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் வருவோம். வெற்றி பெறுவோம். இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மத்திய மாகாணத்தில் ஆரம்பித்து, இப்போது ஊவா மாகாணம் வரை, மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு என்ற இயந்திரம் ஒழிக்கப்பட்டு, தமிழ்ப் பிரிவு என்று ஆகிவிட்டது. 6 தமிழர் பெரும்பான்மை பிரதேச சபைகளை நுவரெலியாவில் போராடிப் பெற்றதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வரலாறு. இருப்பதையும் இழப்பது இப்போதைய வரலாறு.

தனியான தமிழ்க் கல்வி அமைச்சு என்றால் மாகாண சபை வரவு செலவுத் திட்டத்தில், எங்கள் பாடசாலை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகத் தனியான நிதி ஒதுக்கீடு கிடைக்கும். எழுதிவைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம்' - என்றுள்ளது. (ம-இ)

# நிர்வாக ஆளுமைமிக்கவரை இழந்துவிட்டது தமிழினம்!

## சிவஞானசோதியின் மறைவுக்கு இரா.சம்பந்தன் இரங்கல் செய்தி



கொழும்பு, ஏப். 7

'நீண்ட அனுபவமும் நிர்வாக ஆளுமையும் மிக்க பெருமகனார் வே.சிவஞானசோதியைத் தமிழ்ச் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது. இது ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் பெரும் இழப்பாகும்- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் வே.சிவஞானசோதியின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான சிவஞானசோதி இலங்கை நிர்வாக சேவையில் நீண்டகால அனுபவம் மிக்கவர். அவர் பல அமைச்சுகளில் செயலாளராகக் கடமையாற்றியிருந்தார்.

குறிப்பாக இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, வடக்கு செயலணி, நல்லிணக்க அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார்.

இறுதியாக இவர் பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமையாற்றியவர்.

அனைவருடனும் சகஜமாகப் பழகும் அவர், தனக்குக் கிடைத்த பதவிகளைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசத்துக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிந்து நேரடியாகச் சென்று பல திட்டங்களை மேற்பார்வை செய்து திறமையாகச் செய்து முடித்தவர்.

மிக முக்கியமாக, கடந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் மிக நெருக்கமான முறையில் இணைந்து வடக்கு, கிழக்கில் அபிவிருத்திச் செயற்பாடுகள், வேலை வாய்ப்புக்கள், உள்ளிட்ட கணிசமான பல பணிகளைக் காத்திரமாக முன்னெடுத்தவர்.

அதேநேரம், எதிர்காலத்திலும் அவரது சேவைகள் தமிழ் மக்களுக்கு மிகவும் இன்றியமையாதவையாகவே இருந்தன. இதனைப் பலரும் உணர்ந்திருந்தார்கள். அவரை மக்கள் சேவைக்கு அழைத்து வருவதற்கான சமிக்ஞைகள் பலவற்றையும் எமது கட்சியின் உறுப்பினர்களும், புத்திஜீவிகளும் வலியுறுத்தியிருந்தனர்.

சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த தருணத்தல் அவர் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்திவிட்டார். அவரது பிரிவு தமிழினத்துக்குப் பெரும் இழப்பாகும்.

நிர்வாக ஆளுமைமிக்க பெருமகனாரை தமிழ்ச் சமூகம் இழந்துவிட்டது. அவரது இழப்பு நிரப்ப முடியாத வெற்றிடமாகும்.

அவரைப் பிரிந்து நிற்கும் அவரது குடும்பத்தார் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்' - என்றுள்ளது. (ம-22)

## ஏற்றுமதியாகிறது கதலி!

கொழும்பு, ஏப். 7

கதலி வாழைப்பழங்களை பழ வகைகளில் ஒன்றாக ஏற்றுமதிசெய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இதனால் சந்தையில் கதலி வாழைப்பழங்களுக்கு கேள்வி அதிகரிப்பதுடன் விவசாயிகளுக்கு கூடுதல் கொள்விலை கிடைக்கும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராஜாங்கனைப் பிரதேசத்தில் பத்து ஏக்கரில் வாழைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த பயிர்ச்செய்கையை கண்காணிக்கும் நோக்குடன் விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் சமீபத்தில் அந்தப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தனர். இவ்வாறு, நாட்டிலிருந்து பெரியளவில் கதலி வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அத்துடன் வாழைப்பழ ஏற்றுமதித் திட்டத்தின் முதலாவது கட்டமே இராஜாங்கனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# வவுனியாவில் குடும்ப விவரங்கள் பொலிஸாரால் திரட்டப்படுகின்றன

## அச்சத்தில் மக்கள்

வவுனியா, ஏப். 7

வவுனியாவில் சில இடங்களில் பொதுமக்களின் விவரங்களைப் பொலிஸார் திரட்டி வருவதால் மக்களிடத்தில் ஒருவித அச்சம் தோன்றியுள்ளது. வவுனியா பூந்தோட்டம் பகுதியில், வீடுகளுக்குச் சென்ற பொலிஸார் அங்கு வசிக்கும் குடும்பங்களிடம் சில படிவங்களை வழங்கி, அவர்களின் விவரங்களைக் கேட்டுச் சென்றுள்ளனர். எவ்வித முறையான காரணங்களையும் வெளிப்படுத்தாமல் இவ்வாறு விவரங்களைக் கோரியுள்ளதால் பொதுமக்கள் மத்தியில் ஒருவித அச்சம் ஏற்பட்டுள்ளது. (ம-110)

# நாடு கடத்தப்பட்ட இருவர் புலனாய்வுப் பிரிவால் கைது

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் தீவிரவாதத்தைப் போதித்தனராம்

கொழும்பு, ஏப். 7

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட இருவர் அண்மையில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மடிக்கணினிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் மேற்படி இருவரும் தீவிரவாத போதனைகளை முன்னெடுத்திருந்தனர் என்று தெரியவந்துள்ளது - இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசிக்கும் இலங்கைக் குடும்பங்களுக்கே இவர்களால் தீவிரவாத சித்தாந்தங்கள் குறித்த போதனைகள் நடத்தப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்கள் மாவனெல்ல மற்றும் கம்பொலவைச் சேர்ந்தவர்கள். சந்தேகநபர்களிடமிருந்து மடிக் கணினிகளையும் புலனாய்வுப் பிரிவு கைப்பற்றிய நிலையில், அந்த மடிக்கணினிகளை வல்லுநர்கள் பகுப்பாய்வு செய்து ஆய்வு செய்துள்ளனர். நிபுணர்களின் அறிக்கை பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் பெறப்பட்டுள்ளது - என்றார். (ம)

# தேர்தல் சட்டங்களை சீர்திருத்த விசேட குழு; நாடாளுமன்று அனுமதி

கொழும்பு, ஏப். 7

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமாக நாடாளுமன்ற விசேட குழுவை நியமிப்பது தொடர்பில் சபை முதல்வரும், வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தன சமர்ப்பித்த பிரேரணை நிறை வேற்றப்பட்டது.

இந்த விசேட குழு 15 உறுப்பினர்களை கொண்டமையவுள்ளதுடன், சபாநாயகரால் குழு நியமிக்கப்பட்டதை அடுத்து, 6 மாதங்களில் அதன் பரிந்துரைகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்கள், மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதும், எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்களை செயற்படுத்த அவசியமான திருத்தங்களை முன்மொழிவதும் இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். (ம-319)


தொடர்புடைய செய்தி பக்கம் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டுக்கால

# கொரோனா அலை உருவாகும் அபாயம்!

அரசு எச்சரிக்கை



**கொழும்பு, ஏப். 7**

**சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் புத்தாண்டு நிகழ்வுகளை நடத்தாவிட்டால் மீண்டுமொரு கொரோனா அலை உருவாகக்கூடிய அபாயம் உள்ளது. எனவே, அனைவரும் விழிப்பாக செயற்பட வேண்டும் என்று அரசு கோரியுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வருகின்றனர். பொருள்களை வாங்குவதற்கு ஒன்றுகூடுகின்றனர். இதனால் கொரோனா வேகமாக பரவக்கூடிய அபாயம் உள்ளது. இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று எழுப்பப்பட்ட கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு அறிவிப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் பொலிஸ் அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகளும் பங்கேற்கின்றனர். இவர்களுக்கு பல அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக புத்தாண்டு நிகழ்வுகளின்போது முதலாவது மற்றும் இரண்டாவது தொடர்பாளர்களை இனங்காண்பது கடினமான செயலாகும். எனவே, இந்தக் காலப்பகுதியில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை உரிய வகையில் பின்பற்ற வேண்டும்.

அதேபோல் கொரோனா பரவிவரும் சூழ்நிலையில், நிகழ்வுகளை உரிய வழிகாட்டல்கள், கட்டுப்படுத்தல்களுடன் நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரிகளும் உரிய வகையில் செயற்படவேண்டும்.

அவ்வாறு இல்லாது வழமைபோல் நிகழ்வுகள் நடத்தப்படுமானால் மீண்டுமொரு கொரோனா அலை உருவாகலாம். எனவே, அனைவரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும், என்றார். (ஒ.44)



## பயணக் கட்டுப்பாடுகள் புத்தாண்டில் இருக்காது

இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப்.7

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எந்தவிதமான பயணக் கட்டுப்பாடுகளும் இருக்காது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில் மேல் மாகாணத்தை விட்டு வெளியேறும் நபர்கள் மீது "உடனடி ஆன்டிஜென் சோதனைகளை" நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள,தமிழ் புத்தாண்டை நெருங்கி வருகின்றோம். கடந்த ஆண்டு புத்தாண்டு மாதத்தின் இறுதியிலிருந்து ஒக்ரோபர் வரை கொரோனா முற்றிலுமாக கட்டுப்பாட்டில் இருந்தது.

அந்த வகையில் இந்த மாதம் கொழும்பு மாவட்டத்தை விட்டு வெளியேறுபவர்களுக்கு எந்தவிதமான பயணக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படும் என்ற நம்பிக்கை இல்லை. ஆனால் அன்டிஜென் சோதனைக்கான வாய்ப்பு உள்ளது. கொரோனாத் தொற்று உள்ளதா என்பதைக் கண்டறிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது விசேட சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன -என்றார். (ப-இ)



## விரைவில் மாகாண தேர்தல்! மீண்டும் உறுதியளித்தது அரசு

கொழும்பு, ஏப். 7

மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்ற உறுதிமொழியை அரசு நேற்று மீண்டும் வழங்கியது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் மேலும் இழுபடுவதற்கான சாத்தியம் இருக்கின்றதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல இவ்வாறு உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விருப்பு வாக்குமுறைமை நீக்கப்படவேண்டும் என்று பல வருடங்களாக வலியுறுத்தப்பட்டுவருகின்றது. அத்துடன், 70 வீதம் தொகுதி அடிப்படையிலும் 30 வீதம் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு இடம்பெற வேண்டும் என்ற கலந்துரையாடல் கடந்த 15 வருடங்களாக இடம்பெற்றுவருகின்றன.

எனவே, எந்த முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது என்பது குறித்து வெகுவிரைவில் முடிவெடுக்கப்படும். தொகுதி நிர்ணயம் இடம்பெற்ற பின்னர் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு. இது பற்றியே அமைச்சரவையிலும் கலந்துரையாடப்பட்டது- என்றார். (ஒ.44)

## ரஷ்யாவிடம் ஓடுகிறது இலங்கை

கொழும்பு, ஏப். 7

இந்தியாவின் கொரோனாத் தடுப்பூசி இலங்கைக்கு வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ள இந்தச் சூழலில், ரஷ்யா விடமிருந்து தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

ரஷ்யத் தயாரிப்பான ஸ்புட்னிக் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது. 6 மில்லியன் தடுப்பூசிகள் இதன்போது கொள்வனவு செய்யப்படவுள்ளன. (ஒ.இ)



## வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி தொடர்பில் விவரங்கள் தேவை

**முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் கீழான பதிவுகளை ஏற்க முடியாது என்கிறது அரசு**

கொழும்பு, ஏப். 7

முஸ்லிம் கலாசார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி தொடர்பான விவரங்கள் தேவை. ஆனால் அந்தத் திணைக்களத்திடம் மேற்படி விவரங்கள் இல்லை. எனவே தன்னார்வ நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலணியின் கீழ் பதிவு செய்யப்படுவது கட்டாயம். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன் போது ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தன்னார்வ நிறுவனங்களின் பதிவுகள் ஏன் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வியை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், இந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருகின்றது. அது தொடர்பான விவரங்களை அவர்கள் முஸ்லிம் கலாசார திணைக்களத்துக்கு தெரியப்படுத்துவதில்லை. பாதுகாப்புத் தரப்பினர் இந்தப் பணம் தொடர்பான விவரங்களை திணைக்களத்திடம் கேட்டுள்ளனர். அவர்கள் தம்மிடம் விவரங்கள் இல்லை என்று கூறியுள்ளனர். இந்தத் தொண்டு நிறுவனங்கள் தங்கள் விவரங்களை சமர்ப்பிக்காமல் விடுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் இல்லை. இதனால்தான் இவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த அனைத்து நிறுவனங்களையும், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலணியின் கீழ் பதிவுசெய்யுமாறு 2019ஆம் ஆண்டு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டது. கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சில நிறுவனங்கள் இயங்கவில்லை என்பது இதன்போது கண்டறியப்பட்டது. ஏனைய நிறுவனங்களை உரியவாறு புதிய ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யுமாறு ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த பல நிறுவனங்கள், நிறுவனங்கள் சட்டம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலணியின் கீழ் தம்மைப் பதிவு செய்துள்ளன- என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோரைப் பாதுகாக்க நீதிமன்றத்தை நாடுவோம்

## எச்சரிக்கிறார் ரஞ்சித் விதானகே

**கொழும்பு, ஏப்.7**

**நச்சுத்தன்மையான உணவுப் பொருள்களை உட்கொள்ளும் மக்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலை வகிக்கிறது. தரமற்ற உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதைப் பொறுப்பிலுள்ள அரச அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரசு இனியாவது நாட்டு மக்களுக்குத் தரமான உணவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.**

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களில் நச்சுப் பதார்த்தங்கள் கலக்கப்பட்டுள்ளமை குறித்து தற்போதைய சூழலில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்கள் பயன்படுத்தும் உணவுப் பொருள்களில் உடல் ஆரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நச்சுப் பதார்த்தங்கள் கலக்கப்பட்டுள்ளன என்பதை உணவுத் தர நிர்ணயம் தொடர்பில் ஆராயும் அரச அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எனவே பாதுகாப்பான உணவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் அஃப்லாரொக்சின் நச்சு பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் அஃப்லாரொக்சின் கலக்கப்பட்ட உணவுப் பொருள்கள் பல இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றை குறிப்பிட்டால் நிறுவனங்கள் நட்டமடையும் என தர நிர்ணய சபையின் பணிப்பாளர் நாயகம் சித்திகா சேனவிரத்ன தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிக்கின்றேன்.

பொறுப்பற்ற வகையில் இவர் தெரிவித்த கருத்துக்கு அரசாங்கம் முறையான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இல்லாவிடின் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க நாங்கள் நீதிமன்றத்தை நாடுவோம்- என்றார். (ம-இ)

# முறைகேடாகச் செயற்பட்டதுடன் காணி உரிமையாளர் மீதும் தாக்குதல்

## கோப்பாயில் சம்பவம்

கோப்பாய், ஏப்.7

காணி வேலியின் கதிகாலை வெட்டி எரியூட்டியவர்களைத் தடுக்கச் சென்ற காணி உரிமையாளர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கோப்பாய் மத்தி நீமசிட்டி பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது;

கோப்பாய் மத்தி நீமசிட்டிப் பகுதியில் உள்ள காணி ஒன்றின் வேலிக்கு நடப்பட்ட கதிகாலை வெட்டிய ஒருவர் அவற்றை தீயிட்டு எரித்துள்ளார். இதை அவதானித்த காணி உரிமையாளர் குறித்த சம்பவத்தைத் தடுக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது கதிகாலை எரித்தவருக்கும் காணி உரிமையாளருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. கதிகாலை வெட்டி எரித்தவருடன், ஒன்றாக நின்ற கும்பல் காணி உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

காணி உரிமையாளர் அந்தக் கும்பலிடமிருந்து தப்பி ஓடியுள்ளார். சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (வ-20)



# கருத்து வேறுபாடுகளால் அரசை பலவீனமாக்காதீர்

## 'மொட்டுக்' கட்சி உறுப்பினர்களிடம் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 7

சிறிலங்கா பொதுஜன பெரமுன கூட்டணிக்குள் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்தக் கருத்து வேறுபாடுகள் காரணமாக அரசைப் பலவீனப்படுத்திவிடாதீர்கள். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

கேகாலையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பல சவால்களுக்கு மத்தியில் அரசு பயணிக்கின்றது. கொரோனாவால் சரிவடைந்திருந்த பொருளாதாரத்தையும் நாம் சரியாக முகாமை செய்தோம். கொரோனாப் பரவலை கட்டுப்படுத்தினோம். கொரோனாத் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக வாழ மக்கள் பழகிக் கொண்டுள்ளார்கள்.

அரசிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை வெல்வதற்கு கூட்டணியாகப் போட்டியிட்டதே காரணம். எனவே எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலையும் அவ்வாறு எதிர்கொண்டு வெல்வோம்- என்றார். (ஒ.இ)

# மாற்றுத்திறனாளிக்கு சக்கர நாற்காலி

வவுனியா, ஏப்.7



வவுனியா மகாறம்பைக்குளத்தில் வசிக்கும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு வெளிச்சம் அறக்கட்டளையின் ஊடாக சக்கர நாற்காலி ஒன்று நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டால் வலது கை முறிந்த நிலையில், தற்போது பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருக்கும் அந்தோனிப்பிள்ளை இராசமணி (வயது89) என்பவருக்கே இந்தச் சக்கர நாற்காலி வழங்கப்பட்டுள்ளது. (ம-222)

## உணவு கையாளும் வாரத்தில்

# வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

வவுனியா,ஏப்.7



ஏப்ரல் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதிவரை உணவு கையாளும் வாரமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ள நிலையில், வவுனியாவில் 10க்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று வவுனியா மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

காலாவதித் திகதி முடிவடைந்த உணவுப்பொருள்கள், பாவனைக்குதவாத தானியவகைகள் மற்றும் சுகாதார சீர்கேடான சாப்பாட்டுக் கடைகள் போன்றவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. இன்றுவரை 22 வியாபார நிலையங்களுக்கு மேல் மேற்பார்வை செய்துள்ளோம்.

அவற்றில் 10 வியாபார நிலையங்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அத்துடன் வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களில் கையாளவேண்டிய சுகாதார விடயங்கள் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்களுக்கு கருத்தரங்குகள் மூலமாக ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம் - என்றார். (ப-110)

# பற்றைகளை அகற்றுமாறு அமைப்புக்கள் கோரிக்கை!

பூநகரி, ஏப்.7

கிளிநொச்சி - பூநகரி வீதியூடாக முக்கொம்பன் செல்லும் பிரதான வீதியின் இருமருங்கிலும் வளர்ந்துள்ள பற்றைகளை கிராம மக்கள் சிரமதானத்தின் மூலம் வெட்டிச் சீர் செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு முக்கொம்பன் கிராமத்தின் பொது அமைப்புக்கள் பூநகரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பிரதான வீதிவழியாகவே பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் பயணிகள் சென்று வருகின்றனர். இதனால் அவர்கள் எதிரில் பயணிக்கும் வாகனங்களை அவதானிக்க முடியாத நிலையில், விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், போக்குவரத்தில் ஈடுபடும் பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக்கும் இந்த வீதியில் வளர்ந்துள்ள பற்றைகள் அச்சுறுத்தலாக இருக்கின்றன எனவும் பொதுஅமைப்புக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ம-12)

# புத்தாண்டு சுப நேர பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஏப்.7

சிங்கள, தமிழ் புத்தாண்டு சுப நேர பத்திரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

பாரம்பரியங்களுக்கேற்ப சுபநேரங்களை அடையாளப்படுத்திய பத்திரமே தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புதுவருடப் பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு மூட்டுதல், உணவு பரிமாறுதல், தலைக்கு எண்ணெய் வைத்தல் மற்றும் தொழிலுக்காக புறப்படுதல் ஆகிய விடயங்கள் சுபநேர பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரின் விலை

'ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகள் தமிழீழம் உருவாக வழியை உருவாக்கும் என்று சிங்கள மக்களை ஏமாற்றி நம்ப வைத்திருக்கிறீர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரான நாங்கள் தமிழீழத்தை கேட்கவில்லை. ஒன்று பட்டு ஒரே நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளுமாறுதான் கேட்கிறோம். ஆனால், நீங்கள் இதுபோன்று தொடர்ந்து நடந்து கொள்வீர்களேயானால், ஈழம் மலர்ந்து விடும். தாமரை மொட்டில் இருந்து தான் அந்த ஈழம் மலரும்' இவ்வாறு உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன்சுட்டிக்காட்டினார்.

சம்பந்தன் 3 ஆண்டுகளுக்கு முன்னர் சுட்டிக்காட்டியதே, பெரமுனவின் ஆட்சிக் காலத்தில் நடக்கப் போகின்றது என்னும் வகையில் முன்னாள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இரு தினங்களுக்கு முன்னர் ஒரு கருத்தைப் பதிவிட்டிருந்தார்.

'கறுப்புஜூலை புகழ் கொண்ட ஒரு தேரர் உட்பட தேரர்களின் குழு, நாட்டின்பெயரை 'சிங்களே' என்று மாற்றுமாறும், அதிகாரப் பரவலாக்கம் வேண்டவே வேண்டாம், சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற யோசனைகளை புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவிடம் கையளித்துள்ளது.

அதாவது இந்த தேரர்கள் மறைமுகமாக, 'உங்களுக்கு இங்கு இடமில்லை. தனித்தமிழீழ நாட்டை இலங்கைத் தீவில் அமையுங்கள்' என்று தமிழர்களுக்கும், 'அதற்கு உதவுங்கள்' என்று சர்வதேச சமூகத்துக்கும் கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன்' எனப் பதிவிட்டிருந்தார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து ஆட்சிப்பீடமேறியது மொட்டு அணி. தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் தீவிரம் பெற்றன.

இந்த நாடு சிங்களவர்களுக்கு மாத்திரமே சொந்தம். தமிழர்கள் வந்தேறு குடிகள் என்கிற கோசம் தென்னிலங்கையில், உச்சத்தில் ஒலிக்கத் தொடங்கியது. இவற்றுக்கு ஏற்றால்போல் ஜனாதி பதியும், சிங்கள பௌத்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவன் என்று திரும்பத் திரும்ப மார்தட்டத் தொடங்கினார்.

தமிழர்களின் நிலங்கள் அரச திணைக்களங்களைக் கொண்டே சூறையாடப்பட்டன. கருத்துச் சுதந்திரத்துக்கு நீதிமன்றங்கள் ஊடாகத் தடை விதிக்கப்பட்டன. உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கு முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. தமிழர்களின் தொன்மத்தை அழிப்பதில், வரலாற்றை மாற்று வதில் ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்தினர். ஆட்சியாளர்களின் இந்தப் போக்கு தமிழர்கள் மத்தியில் மீண்டும் அறச் சீற்றத்தை ஏற்படுத்தியது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணி, மக்களின் தன்னெழுச்சிப் பேரெழுச்சியாக, சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பாளர்களின் அடக்குமுறைக்கு எதிரான கொந்தளிப்பாக வெளிப்பட்டது. அத்துடன் மைத்திரி– ரணில் அரசின் காலத்தில் தணிந்திருந்த உரிமைத்தாகம் கொஞ்சம் கொஞ்சமாக வேட்கைகொள்ளத் தொடங்கியிருக்கின்றது.

புதிய அரசமைப்புக்கான உருவாக்க முயற்சியில், சிங்கள தேசத்தை மாத்திரமே கோத்தா அரசு திருப்திப்படுத்தப் போகின்றது. அந்த அரசின் போக்குகள் அதனைத் தெட்டத் தெளிவாகவே காண்பிக்கின்றன. ஒன்றுபட்ட நாட்டுக்குள் எம்மை நாமே ஆள்வதற்கு அதிகாரங்களைத் தாருங்கள் என்று தான் தமிழர்கள் கேட்கின்றனர். ஆனால் சிங்கள பௌத்த பேரினவாதத் திமிரில் ஊறித் திளைத்திருக்கும் ஆட்சியாளர்கள் அதற்கு இடம்கொடுக்கப்போவதில்லை.

இந்த நாட்டில் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்து வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்த பின்னர்தான் தனி நாட்டுக்காக தமிழீழத்துக்காக தமிழ் மக்கள் போராடினார்கள். 1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத்தீர்மானத்துக்கு ஆதரவாக தமிழ் மக்கள் வழங்கிய ஆணை, தெட்டத் தெளிவாக தமிழீழக் கோரிக்கையை, தனிநாட்டுக் கோரிக்கையை முன்னிறுத்தியது.

இப்போதும் தமிழர்களை அந்தத் திசை நோக்கித் தள்ளுவதையே கோத்தா அரசும் செய்கின்றது. 70 ஆண்டுகளாக தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் துயருக்கான விலையை, பதிலை காலம் விரைந்து சொல்லும்.




# இடமாற்றத்தில் சமவாய்ப்பு இல்லையேல் தேசிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை

## இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.7**

**அனைத்து ஆசிரியர்களுக்கும் இட மாற்றத்தில் சமவாய்ப்பு வழங்கப்படாதமை குறித்து சாதகமான பதிலை வடக்கு கல்வி அதிகாரிகள் வழங்காது போனால் நாம் தேசிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல நேரிடும் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் ஆசிரியர் சேவைச் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

ஆளுநரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, கடந்த ஜனவரி 19ஆம் திகதி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனின் தலைமையின் கீழ், கல்வி அதிகாரிகளும் எமது சங்கப் பிரதிநிதிகளும் சந்தித்து கலந்துரையாடியபோது, 6, 7, 8 மற்றும் 9 வருடங்கள் வெளிமாவட்ட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் அனைவருக்கும் வெகு விரைவில் இட மாற்றம் வழங்கப்படும் என்றும், அவர்களின் பெயர் விவரங்களைத் தந்துதவுமாறும் தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாண செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க, எமது சங்கம் சார்பாக பெயர் விவரங்களை வழங்கினோம். இது தொடர்பாக நாம் கல்வி அதிகாரிகள் பலரைச் சந்தித்தும் சாதகமான முடிவேதும் கிடைக்கப் பெறவில்லை. இரண்டு மாதங்களைக் கடந்த நிலையில், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தம்முடைய அதிருப்தியை எமது சங்கத்தின் தலைமைப்பீடத்திடம் தெரிவித்து வருகின்றனர். இவ் விடயம் தொடர்பாக, இரண்டு வாரங்களுக்குள் எமக்கு சாதகமான முடிவைத் தராவிடின், தேசிய ரீதியான தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல நேரிடும் என்பதை மன வருத்தத்துடன், தெரிவித்து கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ)

*ஈஸ்டர் தாக்குல்;*

# ஆணைக்குழுவின் அறிக்கையின்படி மைத்திரிபால குற்றவாளி அல்லர்

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில், எந்தவோர் இடத்திலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியென பெயரிடப்படவில்லை, அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா என்பதை ஆராய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சந்தர்ப்பம் வழங்குமாறே அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பேராயரின் வருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், குண்டு வீசியவர் மைத்திரிபால அல்லர். குண்டுவீசிய வரை கண்டுபிடிக்கவேண்டும். இல்லாவிட்டால், உண்மையான குற்றவாளி யாரென்பது மறைந்து விடும். நாம் தனிப்பட்ட ரீதி யிலோ எமது தலைவருக்காகவோ இதனைச் சொல்லவில்லை. குண்டை வீசியவரைத் தேடுவதே எமக்குள்ள பிரச்சினை. இதன் பின்புலத்தில் இருந்த சக்தியைக் கண்டுப்பிடிக்கும் வரையிலும் நாம் எமது போராட்டத்தை கைவிட மாட்டோம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மாத்திரமா இதற்குப் பொறுப்பு? அன்றிருந்த அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். அவர்கள் எல்லோரையும் ஓரங்கட்டிவிட்டு, மைத்திரிபால சிறிசேனவை மட்டுமே பிடித்துக்கொண்டிருக்கின்றனர். இது எமது கட்சியைப் பலப்படுத்த எடுக்கும் முயற்சியை குழப்புவதற்கான செயற்பாடாகும். எனவே, இதன் பின்னணியில் அரசியல் சக்தியொன்று உள்ளது. கர்தினாலும் அரசியல்மயமாகி உள்ளாரென்றே எமக்குத் தோன்றுகின்றது - என்றார். (ஐ-இ)

# 4,000 மருத்துவர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை

கொழும்பு, ஏப்.7

நாட்டிலுள்ள அரச மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்தன தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் மருத்துவர்களுக்கு சுமார் 4 ஆயிரம் வெற்றிடங்கள் நிலவு கின்றன. பல்கலைக்கழகங்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் சுமார் ஆயிரம் மருத்துவர்கள் வெளியேறுகின்றனர். அவர்களில் ஒரு பிரிவினர், தனியார் துறையில் பணியைத் தொடர்கின்றனர். மற்றுமொரு பிரிவினர் உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளை நோக்கிச் செல்கின்றனர். இதனால் இவ்வாறான பற்றாக்குறை நிலவுகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட 13 மாவட்டங்களில் வெயில் உச்சம்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

**முல்லைத்தீவு, ஏப்.7**

**முல்லைத்தீவு, வவுனியா, புத்தளம், குருநாகல், அநுராதபுரம், பொலநறுவை மற்றும் மொனராகலை உள்ளிட்ட 13 மாவட்டங்களில் வெப்பமான காலநிலை மிகத் தீவிரமாக உணரப்பட்டுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, மாத்தளை, அம்பாறை, பதுளை, கம்பஹா, கொழும்பு, களுத்தறை, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் கடுமையான வெப்பத்தால் பாதிக்கப்படும்.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராத புரம், பொலநறுவை, புத்தளம், குருநாகல், மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களும் வெப்பமான வானிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் வெளியிடத்தில் வேலை செய்வோர் முடிந்தவரை அடிக்கடி நீர் உள்ளெடுக்க வேண்டும். நிழலில் ஓய்வு எடுக்கவேண்டும்.

வீட்டில் இருக்கும் முதியவர்கள் மற்றும் நோயுற்றவர்கள் மற்றும் குழந்தைகள் சரியாகக் கவனிக்கப்பட வேண்டும் -என்றுள்ளது. (ப-இ)

# இடம்பெயர்ந்த 233 குடும்பங்களுக்கு காணி கொள்வனவுக்கு நிதி விடுவிப்பு

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த,காணி இல்லாத 233 பேருக்கு காணி கொள்வனவு செய்வதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாவட்டத்தில் 3 ஆயிரத்து 56 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் வசித்து வருகின்றன.

அவர்களை விட 409 குடும்பங்கள் தற்காலிக நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றன.

கடந்த 2020 ஆம் ஆண்டு 86 குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் காணி வாங்கிக் கொடுத்து, வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன.

தற்போது 319 குடும்பங்கள் காணி வீடு இல்லாதவர்களாக அடையாளப்படுத்தப்பட்ட நிலையில். அவர்களில் 90 பேருக்கு, சொந்தக் காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ளன.

தற்போது 233 பேருக்கு காணி வாங்குவதற்கான முழுமையான நிதி கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், 75 பேருக்கு காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றுக்கான உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஏனையோருக்கும் விரைவாக காணி வழங்குவதற்கான மதிப்பீடுகள் மாற்றும் நில அளவை படம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ஜ-20)



# கிளிநொச்சியில் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஏப்.7

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் மஞ்சள் நிற லங்கா சமையல் எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தற்போது பண்டிகைக் காலம் என்பதால் எரிவாயுத் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

அந்தவகையில், உணவக உரிமையாளர் மற்றும் ஒட்டுத் தொழில் புரிவோர் எனப் பல தரப்பினரும் சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து எமது வாழ்வாதாரத்தையும் நாளாந்த பாவனைக்கான எரிவாயுவையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-113)

# பொலிஸ் எனக் கூறி 5 பவுண் நகை திருட்டு!

வவுனியா, ஏப்.7

வவுனியாவின் சில பகுதிகளில் சில நபர்கள் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி 5 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்றில் நேற்றுமுன்தினம் சென்ற இந்த நபர்கள் தம்பனை புளியங்குளம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று, தங்களைப் பொலிஸார் என அடையாளப்படுத்திக் கொண்டு, வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இதையடுத்து வீட்டைச் சோதனை செய்ய வீட்டார் அனுமதித்த நிலையில், வீட்டைச் சோதனை செய்வது போல் பாசாங்கு செய்துவிட்டு, அங்கிருந்த தங்க நகைகளை அவர்கள் கொள்ளையிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியாப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-110)

# 'குடு' நுகர்ந்த இருவர் கைது



முல்லைத்தீவு, ஏப்.7

'குடு' போதைப் பொருளை நுகர்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் போதைத் தடுப்பு பிரிவினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - கள்ளப்பட்டு கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அதே கிராமத்தைச் சேர்ந்த 27 மற்றும் 28 வயதுடைய இளைஞர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவரிடமிருந்து 9 கிராம் 180 மில்லிக்கிராம் அளவுடைய குடு போதைப்பொருளும், மற்றவரிடமிருந்து 110 மில்லிக்கிராம் குடு போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளன. (வ-19)

# வாள்வெட்டு சம்பவங்கள் இனி வவுனியாவில் நடைபெறாது

## திலீபன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா,ஏப்.7

வவுனியாவில் வாள்வெட்டுச் சம்பவங்கள் இனி ஒருபோதும் நடைபெற மாட்டாது. பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் எவராவது வாள்களுடன் காணப்பட்டால் 0766224949 மற்றும் 0766226363 ஆகிய தொலைபேசி இலங்கங்களுக்கு அறியத்தாருங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா குருமன்காடு மற்றும் திருநாவற்குளத்துக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வாள்கள், கத்திகளுடன் ஒரு குழுவினர் அப்பகுதியால் செல்வோரை அச்சுறுத்தி வருகின்றனர் என்று தகவல் கிடைத்தது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இவ்வாறு தெரிவித்தார். (ஜ-213)

# எமது வலிகளும் வேதனைகளும் சுமந்திரன் எம்.பிக்கு தெரியாது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் கிளிநொச்சி உறவுகள் கவலை

கிளிநொச்சி, ஏப்.7

வலிகளையும், வேதனைகளையும் சுமந்திருந்தால், இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலை கடந்து சென்றிருந்தால், எங்களுடைய வலிகளும், ஆதங்கங்களும் சுமந்திரனுக்குப் புரிந்திருக்கும் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

உள்நாட்டில் இடம்பெற்ற இறுதிப் போர் தொடர்பான சாட்சியங்கள் போதாது என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் உறவுகள் மேலும் தெரிவித்ததாவது;

உண்மையிலேயே சுமந்திரன் ஒரு கட்சி சார்ந்தவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு கட்சியினுடைய பேச்சாளராகவும் இருக்கலாம். ஆனால் எம்மைப்போல் வலிகளையும், வேதனைகளையும் சுமந்திருந்தால், இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலைக் கடந்து சென்றிருந்தால் எங்களுடைய வலிகளும், ஆதங்கங்களும் அவருக்குப் புரிந்திருக்கும். அவர் தமிழ் பேசுபவராக இருந்தும் கூட தன் இனத்தின், மொழியின் பற்று இல்லாமல் பேசிக் கொண்டு இருக்கிறார் என்று நாங்கள் அறிகின்றோம். அதன் உண்மைத்தன்மை எவ்வளவு என்பது எமக்கு விளங்கவில்லை. ஏனென்றால் நாங்கள் தாய்மார். நாங்கள் புரிந்துகொண்டு ஆதங்கங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் போது எமக்கோ அல்லது எமது போராட்டத்துக்கோ இடையூறாக எவர் வந்தாலும் அவர்களை நாங்கள் தட்டிக்கேட்போம்.

ஏற்கனவே நாங்கள் உண்மைச் சாட்சியங்களை முன்வைத்திருக்கின்றோம். ஆதாரங்களுடன் ஜெனிவா முற்றத்திலே 1000 கோவைகளை சாட்சியங்களுடன் ஒப்புவித்திருக்கின்றோம். சாட்சியங்களாக நாங்களே அங்கு சென்று பேசியிருக்கிறோம். வலிகளையும், வேதனைகளையும் சுமந்த உறவுகள் எமக்குப் பக்கபலமாக இருந்து, எங்களுக்காக பேசி, வழிநடத்துகிறார்கள். சர்வதேச நாடுகளே எங்களை திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு இன்று எமது போராட்டம் வலி சுமந்ததாக உள்ளது என்பதை சுமந்திரனுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம் - என்றனர். (ப-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பும் இலங்கையருக்கு அரச ஒப்புதல் தேவையில்லை

## இராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, ஏப்.7
வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதலை பெறத் தேவையில்லை என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட தனிமைப் படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு அமைய உள்வரும் பயணிகள் அல்லது சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வெளியுறவு அமைச்சகம் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே இராணுவத்தளபதி மேற்குறித்த அறிவித்தலை வழங்கியுள்ளார். (ப.இ)



## புரேவியால் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நிதி உதவி

சுழிபுரம், ஏப்.7
புரேவிப் புயலில் சிக்கி பொன்னாலைக் கடலில் உயிரிழந்த சுழிபுரம் பெரியபுலோவைச் சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் என்பவரின் குடும்பத்துக்கு புலம்பெயர் உறவுகளால் 85 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
குறித்த பணத்தொகை சங்கானை பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்தவரின் குடும்பத்தினரிடம் கையளிக்கப் பட்டது. அந்தக் குடும்பத்தின் காணித் தேவை தொடர்பில் முகநூலில் பகிரப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது. (வ)

1000 ரூபாவை

# பெற்றுத் தந்தது கோத்தாபய அல்ல

## "நானே" என்கிறார் வடிவேல் சுரேஸ்

கொழும்பு, ஏப். 7
தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றில் எமது சட்டத்தரணிகள் வாதாடியமையாலேயே ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.
ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வர்த்தமானிக்கு எதிராக தோட்டக் கம்பனிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே வடிவேல் சுரேஸ் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இது தனிநபரால் சாத்தியமாக்கப் பட்ட வெற்றி. ஏனையோரும் ஒத்துழைத்திருந்தால் இன்னும் பல வெற்றிகளை நாம் பெற்றிருக்கலாம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் எனக் கூறியிருந்தார். ஆனால் நாம் 4 தடவைகள் நீதிமன்றம் சென்றதன் ஊடாகவே இது கிடைக்கப் பெற்றுள்ளது. இந்திய அரசால் எமது மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளே இன்று வரை நிலைத்து இருக்கின்றன. மக்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்.
ஊவா மாகாணத்தில் தனியான தமிழ் கல்வி அமைச்சு இப்போது இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. இதனை உருவாக்க நான் பாடுபட்டிருந்தேன். இது உருவாக்கப்பட்டிருக்காவிடின் எமது பெண் அதிபர்களை முழங்காலிடச் செய்யும் செயற்பாடுகளே இடம்பெற்றிருக்கும். ஊவா மாகாணசபைத் தேர்தலில் நாம் வெற்றி பெற்று தனியான கல்வி அமைச்சாக தமிழ் கல்வி அமைச்சை உருவாக்குவோம்-- என்றார். (ஒ.இ)

## புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு ரயில் சேவைகள்

கொழும்பு, ஏப்.7
புத்தாண்டை முன்னிட்டு பொது மக்கள் பயணம் மேற்கொள்வதற்கு இலகுவாக எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் சிறப்பு ரயில் சேவைகள் இடம்பெறும் என்று ரயில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.
இதன்படி கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான சிறப்பு ரயில் சேவை இரவு 9 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும். இந்த ரயில் சேவை இம்மாதம் 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டை வரையான சிறப்பு ரயில் சேவை இரவு 9.50 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தி லிருந்து ஆரம்பமாகும்.
மேற்படி சிறப்பு ரயில் சேவை இம்மாதம் 12, 15, 17, 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.
இதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து குருநாகல் வரையான சிறப்பு ரயில் சேவை இரவு 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாவதுடன், இந்த ரயில் சேவை 12 ஆம் திகதி மட்டுமே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

## முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு செயற்கை கால் வழங்கும் ராணுவம்

கொழும்பு, ஏப். 7
போர் காரணமாக கால்களை இழந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு செயற்கை கால் வழங்கும் செயற்றிட்டத்தை இலங்கை இராணுவம் ஆரம்பித்துள்ளது. முன்னாள் புலி உறுப்பினர்கள் 64 பேருக்கு இந்த செயற்கை கால்கள் வழங்கப்பட்டுள்ளன.
இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலைமையில் இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
'போர்க்களத்தில் அவர்கள் எங்களுக்கு எதிராகப் போராடிய போதிலும், அவர்கள் இனி எங்கள் எதிரிகள் அல்லர். அவர்களில் பெரும்பாலானோர் இளையோர் என்பதால் அனைவர் மத்தியிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதுபோன்ற ஒரு திட்டம் முன்மொழியப்பட்டது. இலங்கையில் நல்லிணக்கம் குறித்துக் கேள்விகளை எழுப்புவோர் நாட்டில் நல்லிணக்கம் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்பதை தங்கள் கண்களால் பார்க்க முடியும்' என்றார் இராணுவத் தளபதி. (ஒ.இ)

## இன்றைய நாள்





**மேடம்:** தொழில் சிந்தனையும், திறமையும் உள்ளதால் நன்மை கிட்டும். பெண்களுக்கு மகிழ்ச்சி கூடும்படியான நிகழ்வுகள் நடக்கும். அலைச்சலுக்கு ஆளாக வாய்ப்புண்டு.

**இடபம்:** முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். பரபரப்பு கூடும். உங்களின் பழக்கத்தை மாற்றிக்கொள்ளும்படியான திருப்பம் வரும். பணியாளர்கள் சிறப்பாக செயற்பட்டு பாராட்டுப் பெறுவர்.

**மிதுனம்:** சமீபத்தில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும் நாள். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருந்தால் சண்டை வராது. பணப்புழக்கம் முன்னரைவிட சிறிது மேம்படும். சலிப்பு தீரும்.

**கடகம்:** பணியாளர்களுக்கு நின்றுபோயிருந்த நன்மைகள் தொடரும். பல நாள்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி வரும். தந்தைக்கு அலுவலக ரீதியாக நன்மை ஒன்று வரும்.

**சிம்மம்:** உஷ்ணம் சம்பந்தமான சிரமம் வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். நின்றுபோயிருந்த சுபப் பேச்சுவார்த்தை திடீரெனத் தொடரும். குழந்தைப்பேறு உறுதியாகும்.

**கன்னி:** இளம் வயதினருக்கு புதிதாக காதலில் ஈடுபாடு வரும். கலை சம்பந்தமான புதி[illegible] வரும். புத்திசாலித்தனமும் கவர்ச்சி[illegible] அதிகரிக்கும்.



**துலாம்:** பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். அதிர்ஷ்டம் காரணமாக நன்மை வரும். தந்தைக்கு நற்செய்தி வரும். நட்புகளுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போகும்.

**விருச்சிகம்:** ஒன்றுக்கு மேற்பட்ட லாபங்கள் வரும். பணியிடத்தில் நற்செய்தி உண்டு. திடீரென்று நல்ல வேலை கிடைத்துத் திக்கு முக்காட வைக்கும். பெருமிதம் அளிக்கும் நன்மை உண்டாகும்.

**தனுசு:** தாயாருக்கு திடீர் நற்செய்தி வந்து மகிழ்விக்கும். புது விடயம் கற்பீர்கள். கலை நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பேச்சைக் குறைக்கவும்.

**மகரம்:** உடல், மனதில் ஏற்பட்ட சோர்வு தற்காலிகமானதே. திறமையான பேச்சால் பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பீர்கள். குடும்பத்தில் காணாமல் போயிருந்த கலகலப்பு மீளும்.

**கும்பம்:** தடை, தாமதங்களை எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளுக்கும், கணவருக்கும் நன்மை ஒன்று நடக்கும். ஒதுங்கலாம் என்று நினைத்த விடயங்கள் உள்ளே இழுக்கும்.

**மீனம்:** திடீர் செலவுகள் வரும். நிதான நன்மைகள் உண்டு. மனதில் தீய எண்ணங்கள் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நண்பர்களுக்கு நன்மை செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரும்புத் தோட்டக் காணியில் உப உணவுப் பயிர்ச்செய்கை

கிளிநொச்சி, ஏப்.7
கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலுள்ள 150 ஏக்கர் கரும்புத்தோட்டக் காணியில் உபஉணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஸ்கந்தபுரம் பொது மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி கூடிய 7 பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் இது குறித்து கலந்துரையாடப்பட்டது.
அத்துடன் எதிர்காலத்தில் நஞ்சற்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-13)

# இடைப்போக பயிர்ச்செய்கையை மன்னாரில் மேற்கொள்ள வேண்டாம்

### மாவட்டச் செயலர் விவசாயிகளிடம் கோரிக்கை

**மன்னார், ஏப்.7**
**மன்னாரில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதால் இடைப் போக பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
பெரும்போகப் பயிர்ச்செய்கை நிறைவுற்று வரும் இந்த நேரத்தில் மன்னாரில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நிலையில் விவசாயிகள் இடைப்போகச் செய்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளவும். பெரும்போக அறுவடை நிறைவுபெற்ற சில இடங்களில் இடைப்போகம் செய்வதற்காக இந்தக் காணிகளை உழுது தயார்ப்படுத்தி வருகின்றனர் என விவசாயிகள் பலரால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சிறுபோக பயிர்ச் செய்கை என்பது விவசாயிகளின் விதைநெல் பயன்பாட்டுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருப்பதால் சட்டவிரோதமாக இடைப் போகம் செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக சில விவசாயிகள் கைவிடவேண்டும். சிறுபோகப் பயிர்களுக்கு என்று சேமித்து வழங்கப்படும் நீரை இடைப் போகம் செய்பவர்கள் சட்டவிரோதமாக பயன்படுத்துவதால் சிறுபோக பயிற்செய்கையாளர்கள் மிகவும் பாதிப்படைவார்கள். இதனால் மன்னார் மாவட்டத்தின் விவசாய நிலைமை மேலும் பின்தங்கி போகும் சூழ்நிலை ஏற்படும் - என்றார். (ஐ-213)





## ஜோசப் ஆண்டகைக்கு உறவுகளும் அஞ்சலி

கிளிநொச்சி, ஏப்.7
மறைந்த ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் அஞ்சலி செலுத்தப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது ஆயரின் திருவுவ படத்துக்கு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (வ-6)

## வாள்வெட்டுக் குழு அட்டகாசம்; வவுனியாவில் இருவர் காயம்

வவுனியா, ஏப்.7
வாள்வெட்டுக்குழுவின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில், இருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;
வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வாள்வெட்டுக் குழுவொன்று அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது. குறித்த குழுவினர் அப் பகுதியால் சென்ற பொதுமக்களை வாள்கள், கத்திகளைக் காண்பித்து அச்சுறுத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொர்பில் வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர்.
இது போன்ற குற்றச் சம்பவங்கள் இடம்பெற்றால் உடனடியாக மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் இயங்கும் தமிழ் மொழி முறைப்பாட்டுப் பிரிவின் 0766 224949 மற்றும் 0766226363 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு உடனடியாக முறைப்பாடு செய்யுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (வ-18)

## திருமண மண்டபம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7
பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி ஆலயத்துக்கு பிரான்பற்றைச் சேர்ந்த நல்லசேகரம் இந்திரனின் நிதிப்பங்களிப்பில் 'திருத்தணிகை' எனும் திருமண மண்டபம் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.
குறித்த மண்டபம் விசேட பூசை வழிபாட்டுடன் கடந்த 3ஆம் திகதி காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. (ச-50)

## அந்நிய செலாவணியை ஈர்க்க கால நீடிப்பு

கொழும்பு, ஏப். 7
அந்நிய செலாவணியை நாட்டுக்கு அனுப்புவதை ஊக்குவிக்க ஆரம்பிக்கப்பட்ட விசேட வைப்புக் கணக்குத் திட்டத்தின் கால வரையறையை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அந்நிய செலாவணியை நாட்டுக்கு அனுப்புவதை ஊக்குவிப்பதற்காக கடந்த ஆண்டு விசேட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் ஊடாக 360.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டு வைப்பிலிடப்பட்டுள்ளன. இந்த வைப்புக்களுக்கு விசேட வட்டியை வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
மேலும் இந்த விசேட வைப்புக்கான கணக்கைத் திறப்பதற்குரிய கால எல்லை நேற்றுடன் காலவதியாகியது. இதனை மேலும் நீடிப்பதற்கு நிதி அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ,இ)

## தேசிய புத்திக்கூர்மை விருதுகள்; வடக்கு இளையோருக்கும் வெற்றி



கொழும்பு, ஏப்.7
சிலாஸ்கோம் நிறுவனம் நடத்திய முயற்சியாளர்களுக்கான 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய புத்திக் கூர்மை விருதுகள் வடக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு அண்மையில் சங்கரில்லா விடுதியில் வைத்து வழங்கப்பட்டன.
இந்த விருதுக்கு 170 க்கு மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்த நிலையில், தகைமையுடையோர் தெரிவு செய்யப்பட்டு மாகாண மற்றும் தேசிய ரீதியில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
இதில் கிளிநொச்சி, வட்டக்கச்சியைச் சேர்ந்த யதுஷா குலேந்திரன் இந்த வருடத்துக்கான வளர்ந்து வரும் பெண் தொழில்நுட்ப தொழில் முனைவர் விருதை தேசிய ரீதியிலும் வடக்கு மாகாண ரீதியில் பெற்றனர்.
வட்டக்கச்சியைச் சேர்ந்த குலேந்திரன் கோபீந்திரன் வடக்கு மாகாணத்தின் சிறந்த தொடக்க நிறுவனத்துக்கான விருதைப் பெற்றார்.
வடக்கு மாகாணத்தின் சிறந்த புதுமைத் தயாரிப்புகான [illegible] விருதை யாழ் [illegible] சேர்ந்த மயூரவாணி மதுரநாதன் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஜூட் சஜித், விதுஷன் சில்வெஸ்டர், அகலங்க பெரேரா, ஹெல்மினி பெளலா, தேஷன் ஜெயவர்த்தன மற்றும் இஸ்மாயில் நைசர் ஆகியோர் பெற்றனர்.
மேலும் வடக்கு மாகாணத்தின் சிறந்த புதுமை தயாரிப்புக்கான பாடசாலை ரீதியான விருதை யாழ்ப்பாணம். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த முருகதாஸ் பிரதாபன் மற்றும் யாழ்ப்பாணம், வேம்படி [illegible] உயர்தர பாடசாலை [illegible] சேர்ந்த மதுரா அருந்தவம் ஆகியோர் பெற்றனர். (ற-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கலை உடன் நிறுத்துங்கள்!

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்.7**

**வீட்டுத் திட்டங்களை இடைநடுவில் கைவிட்டு, அரசியல் பழிவாங்கல் செய்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; கடந்த நல்லாட்சியில் நகர, கிராம மக்களுக்கு பல வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. 2019 ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற போது, அந்த வீடுகளில் முதலாம், இரண்டாம் கட்டங்கள் மற்றும் இறுதி வேலைகள் எஞ்சிய நிலையில் வீட்டுத்திட்ட வேலைகள் கைவிடப்பட்டன.

அரசாங்கம் எதுவாக இருந்தாலும் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை பூரணப்படுத்த, பயனாளிகளுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும். மாறாக இன்றைய அரசாங்கம் அவற்றைக் கைவிட்டு, புதிய வேலைத்திட்டங்களை தொடங்குவதாக குறிப்பிடுகின்றது. இவ் வேலைத் திட்டம் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் ஆரம்பிக்கப்பட்டதாலேயே இவ்வாறு செய்ய முற்படுகின்றனர்.

இவ்வாறான அரசியல் பழிவாங்கலைக் கைவிட்டு, அப்பாவி மக்களது வீடுகளைப் பூரணப்படுத்த அவசியமான கொடுப்பனவை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# ஆயிரம் ரூபாவால் வேலை நாள்கள் குறைக்கப்படாது

## ஜீவன் தொண்டமான் உறுதி



கொழும்பு, ஏப். 7

வர்த்தமானி வெளியிடப்பட்ட மார்ச் 5ஆம் திகதியிலிருந்து ஆயிரம் ரூபா நாள் சம்பளம் என்ற அடிப்படையில் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறும். சம்பள அதிகரிப்பு காரணமாக வேலை நாள்கள் குறைக்கப்படப்போகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் எதுவித ஆதாரமுமற்றவை. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பிலுள்ள தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயிரம் ரூபா நாள் சம்பள வர்த்தமானி வெளியான பின்னர் நுவரெலியா மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனி இன்று அதனை நடைமுறைப்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் அனைத்துக் கம்பனிகளும் இதனை நடைமுறைப் படுத்தும்.

ஆயிரம் ரூபா நாள் சம்பளத்தை வழங்குவதால், 13 நாள்கள் மாத்திரமே வேலை வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது. அவ்வாறு முதலாளிமார் சம்மேளனம் கூறவில்லை. எதிர்க்கட்சிகளே கூறுகின்றன. கூட்டு ஒப்பந்தத்தில் காணப்படும் சில விடயங்களில் குறைபாடுகள் இருக்கின்றன. இதனை முதலாளிமார் சம்மேளனமும் சுட்டிக்காட்டுகின்றது. நாமும் அதனை ஏற்றுக் கொள்கின்றோம். காலத் தேவைக்கு ஏற்ப அதனை மாற்றியமைப்பது அவசியம்.

இதேவேளை மலையகப் பகுதிகளில் கடந்த அரசின் காலத்தில் வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. அதனை முழுமைப்படுத்த ஆரம்பகட்டமாக 522 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆயிரத்து 57 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது - என்றார். (ஒ.இ)

## கொரோனாத் தொற்றால்

# கர்ப்பிணிப் பெண்கள் எவருமே இலங்கையில் உயிரிழக்கவில்லை

## சுகாதார அமைச்சு பெருமிதம்

கொழும்பு, ஏப். 7

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான கர்ப்பிணிப் பெண்கள் எவரும் இலங்கையில் இதுவரையில் உயிரிழக்கவில்லை. ஒரு வயதுக்கு உட்பட்ட இரண்டு குழந்தைகள் மாத்திரமே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளன. இவ்வாறு தெரிவித்தார் சுகாதார அமைச்சின் குடும்பநலப் பணியகத்தின் தாய் சேய் சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சித்திரமாலி டி சில்வா.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்படி கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்றால் கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழக்கவில்லை. கொரோனாத் தொற்று ஏற்பட்ட ஒரு வயதுக்கு உட்பட்ட இரண்டு குழந்தைகளும் மருத்துவமனையில் சேர்க்கப்படாமல் வீட்டிலேயே வைத்திருந்தமையால் உயிரிழந்தன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு இலங்கையில் இதுவரை கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவில்லை. தடுப்பூசி ஏற்றிக்கொண்ட கர்ப்பிணிப் பெண்கள் தொற்றுக்கு இலக்காகமாட்டார்கள் என்று இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாகவே இதுவரை இலங்கையில் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படவில்லை- என்றார். (ஒ.இ)

# ஐ.நா சிறுவர் நிதியம் இலங்கைக்கு பாராட்டு

கொழும்பு, ஏப்.7

கொரோனாப் பரவலால் இலங்கையில் தாய் மரணங்கள் அதிகரித்துள்ளன என வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்தநிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் தாய்சேய் சுகாதார சேவைகளை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெருக்கடியான காலத்தில் தாய்சேய் சுகாதார சேவையில் இடம்பெறும் பாதகமான விளைவுகளைத் தடுக்க இலங்கை மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. (வ)

# பசறை பஸ் விபத்துக்கு வீதிச் சீர்கேடு காரணமல்ல

## வெளியானது விசாரணை அறிக்கை

பசறை 13ஆவது மைல் கல் தூரத்தில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்து வீதியின் சீர்கேட்டால் ஏற்பட்டதல்ல. வீதி அபிவிருத்தி அதிகாரசபை இதற்கு பொறுப்பாக இருக்க வாய்ப்பில்லை என்று பஸ் விபத்துத் தொடர்பான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற விபத்துச் சம்பவம் குறித்து ஆராய விபத்து இடம்பெற்ற மறுதினமே மூவர டங்கிய விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் அறிக்கை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

லுணுகலையிலிருந்து கொழும்பை நோக்கி பயணித்த தனியார்பஸ், பசறை 13ஆவது மைல் கல் தூரத்தில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக் குள்ளானது. விபத்தில் 14 பேர் பலியானதுடன், 32 பேர் காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

வீதிச் சீர்கேட்டினாலேயே விபத்து இடம்பெற்றது என்று தெரிவித்து, வீதி அபிவிருத்தி அதிகார சபைமீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)

# இருதயவியல் ஆய்வுகளுக்கான கருவிகளுத்துறைக்கு ஒதுக்கப்பட்டது எவ்வாறு?

## சாணக்கியன் எம்.பி கேள்வி



கொழும்பு, ஏப்.7

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கான இதய வடிகுழாய் மற்றும் ஆஞ்சியோகிராம் கருவியை களுத்துறை மாவட்டத்துக்கு எப்படி ஒதுக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுகாதார அமைச்சரை சில காலங்களுக்கு முன் நான் சந்தித்தபோது, இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கான இதய வடிகுழாய் மற்றும் ஆஞ்சியோகிராம் கருவி ஆகியவை மட்டக்களப்புக்கு வழங்கப்படும் என்று, சுகாதார அமைச்சர் பிரதமருக்கு முன்னால் என்னிடம் உறுதிபடக் கூறியிருந்தார். இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அது கிடைக்கவில்லை. களுத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அறியக் கிடைக்கின்றது. அந்தக் கருவி மட்டக்களப்புக்கு கிடைக்குமானால் பயனடையப்போவது கிழக்கு மாகாணம் முழுவதுமே. மட்டக்களப்பு அல்லது திருகோணமலையில் உள்ள ஒரு நோயாளி, குறித்த சிகிச்சை யைப் பெற்றுக்கொள்ளவதற்காக கொழும்புக்கோ அல்லது யாழ்ப்பாணத்துக்கோ 8 மணிநேரம் செலவழித்து பயணம் செய்ய வேண்டியுள்ளது - என்றார்.

அதற்கு பதிலளித்த சுகாதாரத் துறை அமைச்சர்;

மட்டக்களப்புக்கு குறித்த கருவிகள் கொண்டுவர இருந்த நிலையில், அங்கு காணப்பட்ட தொழில்நுட்ப பற்றாக்குறை காரணமாக, இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

இதனால் களுத்துறையில் அப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேசவாதிகளால் கட்டுவிக்கப்பட்ட கட்டடத்துக்கு மாற்றுவதாக முடிவெடுக்கப்பட்டது. அடுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் மட்டக்களப்புக்கு குறித்த கருவி வழங்கப்படும் - என்றார். (ப.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறவினர் வீடுகளுக்கு சென்று புத்தாண்டைக் கொண்டாடலாம்

## சதொசவின் பொதியை கொள்வனவு செய்க எனவும் கோரிக்கை

**கொழும்பு, ஏப்.7**



**உணவுப் பொருள்களுடன் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று சிங்கள தமிழ் புத்தாண்டைக் கொண்டாடலாம் என்று அரசு அறிவித்துள்ளது.**

கொரோனா நிலைமையைக் கருத்தில் கொண்டு, புத்தாண்டுக் கொண்டாட்டங்களை சுகாதார விதிமுறைகளுக்கு அமைய மேற்கொள்ளுமாறு அரசு அறிவித்துள்ள நிலையில், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று புத்தாண்டைக் கொண்டாடலாம் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக மக்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கு தரமான அவசிய உணவுப் பொருள்களை நிவாரண அடிப்படையில் வழங்க அரசு தீர்மானித்த நிலையில், புத்தாண்டில் உறவினர்களின் வீடுகளுக்கு செல்லும்போது அந்த நிவாரணப் பொதிகளைக் கொண்டு செல்லுங்கள் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 12 அத்தியாவசியப் பொருள்களை உள்ளடக்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி கடந்த முதலாம் திகதி தொடக்கம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிவாரணப் பொதி தரமற்ற உணவுப் பொருள்களை உள்ளடக்கியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய நிவாரணப் பொதியில் இலங்கை தர நிர்ணய சபையின் முத்திரை பதித்த உணவுப் பொருள்கள் மாத்திரம் பொதி செய்யப்பட்டுள்ளன. இந்த விலையைக் காட்டிலும் குறைவான விலையில் தரமான பொருள்களை வேறெந்த விற்பனை நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியாது. கொவிட்19 வைரஸ் தாக்கத்தின் மத்தியில் இவ்வாறான நிவாரணம் வழங்குவது சாதாரண விடயமல்ல. பண்டிகைக் காலத்தில் உறவினர்கள் வீடுகளுக்குச் செல்லும்போது இந்த நிவாரணப் பொருள்களை வாங்கிச் செல்ல வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்துடன் நாடு தழுவிய ரீதியில் உள்ள சதொச விற்பனை நிலையங்கள் எதிர்வரும் 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் மாத்திரம் மூடப்படும். 16 ஆம் திகதி நிவாரணப் பொதி மீண்டும் விற்பனை செய்யப்படும் - என்றார். (ப-இ)

# பீல்ட் மார்சலுக்கு சம்பளம் கிடையாது

## தெளிவுபடுத்தினார் சமல்

கொழும்பு, ஏப். 7



இராணுவத்தின் மிக உயர்ந்த 'பீல்ட் மார்சல்' பட்டம் வழங்கப்படுபவர்களுக்கு சம்பளமோ, ஓய்வூதியமோ வழங்கப்படுவதில்லை. அவர்களது வாழ்நாள் முழுவதும் அந்தப் பட்டம் நீடிக்கும். இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆளும் கட்சி உறுப்பினரால் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இந்தப் பதிலை வழங்கினார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு அவரது பணியாள் தொகுதிக்காக 19 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ இல்லம் எதுவும் வழங்கப்படவில்லை.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரண்ணகொடவுக்கு 9 பேர் பணியாள் தொகுதிக்காக நியமிக்கப்பட்டுள்ள னர். அவர்களின் பாவனைக்காக ஜீப் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் விமானப் படைத் தளபதி குணதிலகவுக்கு அவரது பணியாள் தொகுதிக்காக 17 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வாகனம் எதுவும் வழங்கப்படவில்லை - என்றார். (ஒ,இ)

# மறியலில் இருந்த இந்தியப் பிரஜை திடீர் உயிரிழப்பு

கொழுமம்பு, ஏப்.7

குளியாபிட்டியப் பகுதியில் புத்தர் சிலைக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார்.

வாரியபொல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நபருக்கு நேற்றிரவு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து அவர் வாரியபொல மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

திலீப் குமார் (வயது 47)என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது உடல் வாரியபொல மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக குருநாகல் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ப,இ)

# பாவனைக்குதவாத தே.எண்ணெயை களஞ்சியப்படுத்த காரணம் என்ன?

## றோஹினி கவிரத்ன எம்.பி கேள்வி

கொழும்பு, ஏப்.7

இறக்குமதி செய்யப்பட்டுள்ள புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்யாமல் சுங்கத் திணைக்களம் எதற்காக களஞ்சியப்படுத்தி வைத்துள்ளது ? யாருடைய உத்தரவுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் றோஹினி கவிரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறக்குமதி செய்யப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய எண்ணெய் ஏன் இன்னமும் மீள் ஏற்றுமதி செய்யப்படாமல் சுங்கத் திணைக்களத்தால் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். யாருடைய உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது ? இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனம் பொறுப்பற்ற வகையில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பொறுப்பிலிருந்து விலக இடமளிக்க முடியாது. அத்தோடு இந்தச் சர்ச்சைக்குரிய எண்ணெய் சந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதும் தெளிவாகக் கூறப்படவில்லை. அவ்வாறு விநியோகிக்கப்பட்டிருந்தால் அது எந்தப் பெயரைக் கொண்டுள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டும் - என்றார்.

இதேபோன்று விஷத்தன்மை யுடைய உணவுப் பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும், எனினும் குறித்த நிறுவனங்களின் வர்த்தகச் செயற்பாடுகள் வீழ்ச்சியடையும் என்பதால் அவை குறித்து வெளிப்படுத்த முடியாது என்றும் இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். தர நிர்ணய கட்டளை நிறுவனம் மக்களைப் பாதுகாப்பதற்காகவா அல்லது இறக்குமதி நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காகவா உள்ளது - என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (ப-இ)

# பேராயரின் கருத்தால் கவலையில் மைத்திரி

கொழும்பு, ஏப். 7



தன்னைப் பற்றி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட கருத்துத் தொடர்பில் தாம் கவலையடைவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஈஸ்டர் பெருநாளன்று கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்திருந்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றவாளி எனக் கூறப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி தனது கடமைகளைச் செய்யத் தவறியவர். இவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடவுள்ளார் எனக் கூறப்படுகிறது. ஆடை அணிந்து கொண்டுதான் அதனைக் கூறுகின்றாரா?' என்றும் பேராயர் கேள்வி எழுப்பியிருந்தார்.

பேராயரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அவர், பேராயர் என்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் நான் மிகவும் கவலையடைகின்றேன்- என்றார். (ஒ,22)

# ஏப்.14ஆம் திகதிக்குப் பின்னர் பல்கலைகளை திறக்க திட்டம்

## மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.7

கொரோனாத் தொற்றுநோய் காரணமாக மூடப்பட்டிருக்கும் பல்கலைக்கழகங்கள் ஏப்ரல் 14ஆம் திகதிக்குப் பிறகு மீண்டும் திறக்கப்படும் என்று இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கான உரிய திகதி குறித்து தற்போது விவாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். இவ்வாறு திறக்கப்படும் பல்கலைக்கழங்களுக்கான சுகாதார வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு; உண்மைகளை மறைக்கும் செயற்பாடே

## வினோநோகராதலிங்கம் எம்.பி காட்டம்

மன்னார், ஏப்.7



**மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பதானது பொது மக்கள் உண்மைச் செய்திகளை அறிந்து விடக்கூடாது என்பது மட்டுமல்லாது, மக்கள் பிரதிநிதிகள் அரசையோ, அரச அதிகாரிகளையோ பொதுவெளியில், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பிரச்சினைகளைக் கொண்டு வரக்கூடாது என்ற உண்மைகளை மறைக்கும் செயற்பாடாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்தான் செய்தியாளர்களைச் சந்திக்க முடியுமென்றால், முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்றால் மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை அழைக்கத் தேவையில்லை. மாவட்ட, பிரதேச அபிவிருத்தி விடயங்களை அதிகாரிகளுடன் பேசி விட்டு ஊடக சந்திப்பை நடத்த முடியும்.

இது முற்றிலும் உண்மைகளை மறைக்கும் விடயமாகும். ஊடகவியலாளர்களின் தனித்துவமான, உண்மைச் செய்திகளை சேகரிக்கும் அவர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு சவால் விடுக்கும் செயற்பாடாகும். மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவர்கள் தவறாக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கும், உண்மைகள் சொல்லாது விடப்படுவதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கும்.

உள்ளூர் செய்தியாளர்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது, அவர்களின் நேர்மை, துணிச்சல் மற்றும் பக்கச்சார்பற்ற நடு நிலை என்பவை மீது கை வைக்கும் ஓர் அரச அடக்குமுறையாகவே தெரிகிறது. எனவே ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் குரல் வளைகளை நெரிக்கும், சுதந்திரத்தை பறிக்கும் செயற்பாடுகளை நிறுத்தி உண்மைகளையும் பொய்யான விடயங்களையும் வெளி உலகுக்கும், மக்களுக்கும் கொண்டு சேர்க்க ஊடகங்களை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு அனுமதிக்க வேண்டும்- என்றார். (ஐ-56)



# டிப்பர் போக்குவரத்தால் சிதைவடையும் வீதிகள்

முல்லைத்தீவு, ஏப்.7

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் முக்கிய வீதிகள் டிப்பர் வாகனங்களின் போக்குவரத்தால் சேதமடைந்து காணப்படுகின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மாந்தை கிழக்கின் பல பகுதியில் காணப்படுகின்ற ஆற்றுப்படுகைகளில் இருந்து டிப்பர்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் மூலம் தினமும் மணல் எடுத்துச் செல்லப்படுகின்றது. இதன் காரணமாக மாந்தை கிழக்கின் வீதிகள் பல சேதமடைந்து காணப்படுகின்றன. நட்டாங்கண்டல் வழியாக சிறாட்டிக்குளம் செல்கின்ற வீதி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுகின்றது. இது தொடர்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

# 32 கிராமங்களை உள்ளடக்கி வாகரையில் சிறுவர் சபை

மட்டக்களப்பு, ஏப்.7

வாகரைப் பிரதேசத்தில் உள்ள 32 கிராமங்களை உள்ளடக்கி வாகரையில் பிரதேச சிறுவர் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச சிறுவர் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு பிரதேச செயலாளர் சுப்பிரமணியம் ஹரன் தலைமையில் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வேர்ல்ட் விஷன் சிறுவர் பாதுகாப்புத் திட்டத்துக்கு பொறுப்பான ஜெயக்குமார், செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலர் பங்குபற்றினர்.

சிறுவர்களின் பங்கேற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கிராம மட்டங்களில் சிறுவர் சமூக வட்டங்கள் உருவாக்கப்பட்டு பிரதேச ரீதியில் பிரதேச சிறுவர் சபையும் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-150)



# தனிமை நிறைவு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாணம் 52ஆவது படைத் தலைமையகம் மற்றும் 521 காலாட் படைப்பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் வசாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த, வெளிநாடுகளிலிருந்து வந்த 115 பேர் இரு வாரங்கள் தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்றுமுன்தினம் தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவு வசதிகளும் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

# சிறுவர் அபிவிருத்திக் கூட்டங்களுக்கு பெண் உறுப்பினர்களுக்கும் அனுமதி

## முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.7

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாதாந்தோறும் நடைபெறுகின்ற சிறுவர் அபிவிருத்திக் கூட்டங்களுக்கு பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளில் 17 பெண் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் கிரிசலிஸ் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் வழிக்காட்டலினூடாக நாடாளுமன்றத்தில் காணப்படும் பெண் உறுப்பினர்களுக்கான ஒன்றியம் போன்று, முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கான ஒன்றியமாக பெண்கள் சிறுவர்கள் நல மேம்பாட்டை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். 2021 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இவ் ஒன்றியத்தினூடாக அந்த உறுப்பினர் மாவட்டச் செயலாளரைச் சந்தித்தனர். இதன் போது அவர்கள் மாவட்டச் செயலருக்கு மனு ஒன்றைக் கையளித்தனர். அந்த மனுவில் பாலியல் வன்முறை, சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்படும் மதுபான விற்பனை, வீட்டுத்திட்டப் பிரச்சினைகள் மற்றும் நுண் நிதிக் கடன் தொடர்பான சவால்கள் ஆகியவை தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு அவற்றைத் தீர்க்கும் நடவடிக்கையாக, மாதாந்த மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் கூட்டத்துக்கு உள்ளூராட்சி மன்றப் பெண் உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்படும் என்று மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-13)

# சாவகச்சேரி சபை உறுப்பினர் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

பொது வாழ்வில் அர்ப்பணிப்போடு தமது சேவையை ஆற்றி வருபவர்கள் மீது மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தவிர்க்கப்பட வேண்டியவை என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் தாக்கப்பட்டமைக்கு எதிராக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

இந்தத் தாக்குதல் பொது வாழ்விலும் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருபவர்களையும் சமாதானத்தை விரும்புபவர்களையும் அச்சுறுத்தும் செயலாகும். இதனை ஒட்டுமொத்த சமூகமும் கண்டிக்க முன்வர வேண்டும் - என்றார். (ஐ-159)

# வீதி துப்புரவு

முல்லைத்தீவு, ஏப்.7

முல்லைத்தீவு பழையமுறிகண்டி கிராமத்தில் இருந்து கோட்டைகட்டியகுளம் கிராமத்துக்குச் செல்லும் வீதியின் இரு புறமும் துப்புரவு செய்யப்படவுள்ளது.

சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதியின் இரு புறமும் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக வீதிக்கு வரும் காட்டு யானைகளை இலகுவில் அடையாளம் காணமுடியாதுள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியின் துப்புரவுப் பணிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் என்று துணுக்காய் பிரதேச சபையின் உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் தெரிவித்துள்ளார். (ஐ-13)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

கொழும்பு, ஏப்.7

புத்தாண்டை முன்னிட்டு 3 ஆயிரத்து 500 பஸ்கள் விசேட சேவைகளில் ஈடுபடவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள், தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு இவ்விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையில் உள்ள சாரதிகளை கண்டறிய விசேட கண்காணிப்பு

### புத்தாண்டை முன்னிட்டு பொலிஸ் நடவடிக்கை

கொழும்பு, ஏப்.7
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, இம்மாதம் 10 ஆம் திகதி முதல் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கண்டறிய விசேட கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் குறைக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள் ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதியன்று மாத்திரம் வீதி விபத்துக்களில் சிக்குண்ட 15 பேர் உயிரிழந்துள்ளனர். நடப்பாண்டில் இதுவே ஒரே நாளில் வீதி விபத்துக்கள் ஆல் அதிகளவானோர் உயிரிழந்த சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-இ)

## மீண்டும் சர்ச்சையில் சிக்கினார் பந்துல

கொழும்பு, ஏப்.7
அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி, வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
மூன்று கிலோ அரிசியில் ஒரு குடும்பம் இரண்டு வாரங்கள் உணவு சமைத்து உட்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ள கருத்தே இவ்வாறு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
25 ஆயிரம் ரூபா செலவு செய்து ஒரு குடும்பம் ஒரு மாதத்துக்கு உணவு உட்கொண்டு வாழலாம் என ஏற்கனவே அவர் தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் மீண்டும் இந்தச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
சதொச விற்பனை நிலையங்களில் புத்தாண்டு நிவாரணப் பொதிகளை மக்கள் பெற்றுக்கொள்வது தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அமைச்சர் மேற்குறித்த கருத்தை தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

## நல்லாட்சி அரசின் காலத்தில் வாகன இறக்குமதியில் மோசடி

***இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு***



கொழும்பு,ஏப்.7
நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் வாகன இறக்குமதியில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 25 லட்சத்து 15 ஆயிரத்து 546 வாகனங்கள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த வாகன இறக்குமதிக்காக ஆயிரத்து 239 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.
குறித்த காலப்பகுதியில் இலங்கைக்கு 103 நாடுகளிலிருந்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவ் இறக்குமதி நடவடிக்கைகளின் போது பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன-என்றார். (ஐ-இ)

# தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடுகளை இனங்காண நாடாளுமன்றில் விசேட குழு

### சபைக்கு வந்தது பிரேரணை



கொழும்பு, ஏப்.7
**தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதற்கு நாடாளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்காக பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவின் பிரேரணையை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபைக்கு சமர்ப்பித்தார்.**

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபை ஒத்திவைப்பு வேளையின்போது, சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பிரேரணையை சமர்ப்பித்தார்.
அந்தப் பிரேரணையில் உள்ளதாவது;
தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காண்பதும், எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்களை செயற்படுத்த அவசியமான திருத்தங்களை முன்மொழிவதும் இந்தக் குழுவின் கடைமையாகும்.
அத்துடன் இந்தக் குழுவின் தவிசாளரும் 15 பேர்களைக் கொண்ட குழு உறுப்பினர்களும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.
குறித்த குழு அதன் முதலாவது அறிக்கையை முதலாவது அமர்வுக்குப் பின்னர் ஆறுமாத காலங்களுள் அல்லது நாடாளுமன்றத்தால் நீடிக்கப்படும் காலப்பகுதியினுள் சமர்ப்பித்தல் வேண்டும். நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் காலத்துக்கு காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் கூடுவதற்கும் இந்தக் குழுவுக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்றுள்ளது. (ப-இ)

ஈஸ்டர் தாக்குதல்;

## மைத்திரி, ரணிலிடம் இழப்பீடு கோரினார் காயமடைந்த சட்டத்தரணி

கொழும்பு, ஏப்.7
கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க என்பவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் இழப்பீடு கோரியுள்ளார்.
மேலும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறிபெர்னாண்டோ முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன ஆகியோர் உட்பட மேலும் 10 பேருக்கு இந்த இழப்பீட்டு அறிவித்தலை அவர் அனுப்பிவைத்துள்ளார்.
அதேபோல், ஈஸ்டர் தினத்தன்று கொழும்பு, ஷங்கரிலா விடுதியில் தாம் இருந்தபோது பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறியதற்காக ஹோட்டல் நிர்வாகம் தனக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக வழங்க வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ப.இ)

## அரசின் திடீர் தடையால் பேக்கரி உற்பத்தி பாதிப்பு



கொழும்பு, ஏப். 7
பாம் எண்ணை இறக்குமதியை தடை செய்து திடீரென வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலால் பேக்கரி உற்பத்திக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.
'பேக்கரி உற்பத்திக்கு மிகவும் அவசியமானது பாம் எண்ணை. அதனைப் பயன்படுத்தியே அனைத்து வகையான பேக்கரி உற்பத்திப் பொருள்களும் செய்யப்படுகின்றன. திடீரென அரசு இந்த முடிவை எடுத்துள்ளதால் பல வழிகளிலும் பேக்கரி உற்பத்தி பாதிக்கப்படப்போகின்றது' என்று அவர் எச்சரிக்கை விடுத்தார். (ஒ.இ)

# சிங்கப்பூர் சட்டங்கள் இலங்கையில் வேண்டும்

### சஜித் பிரேமதாச வலியுறுத்து

கொழும்பு, ஏப். 7
பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவற்கு சிங்கப்பூரிலுள்ள சட்டங்களைப் போன்று இலங்கையிலும் சட்டங்கள் இயற்றப்படவேண்டும். இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.
குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு விசாரணைக்குச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுடன், சஜித் பிரேமதாசவும் நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். விசாரணை முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் [illegible] தெரிவித்ததாவது:
அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் நடவடிக்கை எடுத்திருந்தார். விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை ஒபாமா செயற்படுத்தினார்.
அவர்களின் விசாரணை அறிக்கை, தாக்குதலின் சூத்திரதாரி ஒசாமா பின்லேடன் என்பதைக் கண்டறிய உதவியது. அத்துடன் பின்லேடன் நீண்டகாலமாக திட்டமிட்டே இந்தத் தாக்குதலை நடத்தினார் என்பதையும் கண்டறிய முடிகிறது.
இதேபோன்று இலங்கையும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அதன் சூத்திரதாரியைக் கண்டுபிடிக்க [illegible] அமெரிக்க அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் - என்றார். (ஒ.இ)

## நளின் பண்டார எம்.பி.யிடம் 3 மணி நேரம் விசாரணை

கொழும்பு, ஏப். 7
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவை குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்றுமுன்தினம் மூன்று மணிநேரம் விசாரணை செய்துள்ளது.
தேசிய உளவுச் சேவையின் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த விசாரணை நடைபெற்றது.
இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்று கூறப்படும் சஹ்ரானை, மலேசிய தூதரகத்தில் சாலே பணியாற்றியபோது சந்தித்தார் என்று ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தமை தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதன் பொய்கை

'நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு – ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்'.



# மண்மணம் வீசிய நூற்றாண்டு விழா





> கலைகளை, கலாசாரங்களை, பாரம்பரியங்களைப் பாடசாலைச் சிறுவர்களிடம் வளர்த்தெடுத்து அவற்றின்பால் மாணவர்களை ஊக்குவிக்க இத்தகைய நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும். இதற்கு மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.



○ அனந்தன்

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு மிகப்பெரும் எடுப்பில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று நடத்தப்பட்டுள்ளது. ஒரு பாடசாலையின் நூற்றாண்டு நிறைவில் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த முன்னெடுப்பு நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதே. வட்டுக்கோட்டை சவாரித் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் பெரும் போட்டி நடத்தி முடிக்கப்பட்டது. சுமார் 99 சோடி காளைகள் 5 பிரிவுகளாக இந்த சவாரிப் போட்டியில் பங்கெடுத்தன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் காளைகளின் உரிமையாளர்களுக்கு துவிச்சக்கர வண்டியும், அடுத்தடுத்த மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு வேறுசில பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்பட்டன. மாட்டுவண்டிச் சவாரிகள் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் தற்போது தமிழர்களிடம் இருந்து மெல்லமெல்ல அழிந்துவரும் நிலையில், அத்தகைய கலைகளை, கலாசாரங்களை, பாரம்பரியங்களைப் பாடசாலைச் சிறுவர்களிடம் வளர்த்தெடுப்பு அவற்றின்பால் மாணவர்களை ஊக்குவிக்க இத்தகைய நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்.
இதற்கு மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

---

# இவ்வுலக நியதியது!!

○ பழனிநாதன் நிரோசன்




வண்ணங்களின் கலவையாய்
வயதான வெள்ளை நிலா
எண்ணங்களில் சிலிர்ப்பூட்டும்
வயலோர மெலிதான அடர்காற்று...

தார்ச்சாலை வெக்கை தணிய
பொழியும் சில பனித்துளிகள்
வேர்ப்பிடிப்பில் மெய்மறந்தாடி
வெள்ளெருக்கு விதைப்பறப்பு...

ஆர்ப்பரிக்கும் புத்தாடை சுழாவில்
ஆந்தை ஒன்றின் புதுவரவு அறிகுறி
அசையாத பின்னல் மின்வடத்தில்
அமைதியாக சோடிக்காதங்களை தூக்கம்...

தொடருந்து மீயொலி சமிக்ஞையோடு
சமாந்தரமாக தொடரும் அவசர ஊர்தி
இந்த கங்குலில் இணையான
இருநிகழ்வுகள் இன்பமும் துன்பமும்
இல்லறமும் துறவறமும்...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மறவன்புலவு க. சச்சிதானந்தனின்

# மன்னார் சிவபூமி

○ எஸ். செந்தூரன்



ஆசிரியர் மறவன்புலவு க. சச்சிதானந்தனின் எழுத்தில் சாவகச்சேரி மறவன்புலவிலுள்ள காந்தளகத்தின் வெளியீடாக வந்திருக்கும் 'மன்னார் சிவபூமி' என்ற நூலின் அறிமுகம் இந்து சமய ஆசிரியர் கழகத்தின் ஏற்பாட்டில் 28.03.2021 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9.30 மணியளவில் இணுவிலில் உள்ள அறிவாலய மண்டபத்தில் பேராசிரியர் க .தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் க.பாலசந்திரன் கலந்து சிறப்பித்திருந்தார். யாழ். பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நூல் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்தினார். ஏற்புரையை மறவன்புலவு க.சச்சிதானந்தன் நிகழ்த்தினார். காலத்தின் தேவை கருதி வெளியிடப்பட்ட இந்த நூல் தொடர்பில் கீழ்க்காணும் சிறு குறிப்பொன்றைத் தருவது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகின்றோம்.

இன்று ஆட்சிப்பொறுப்பில் உள்ளோர், இலங்கையை முழுமையாக ஒரு பௌத்த சிங்கள நாடாக நிறுவும் நோக்கில் அதற்கான முன்னெடுப்போடு சான்றாதாரங்களை உருவாக்குவதற்காகத் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்ள முனைவதாகச் சந்தேகிக்கப்படும் சூழலில், இந்த நூலின் வரவு முக்கியமாகிறது. சைவ சமயம் சார்ந்த நூல் என்ற பார்வையை ஒரு புறம் வைத்துவிட்டு, தமிழினம் சார் நலன் நோக்கில் இதை அணுகுவது தமிழருக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்பது எமது கருத்து.

மன்னார் சிவபூமி என்ற நூலின் பெயரே சைவ சமயம் சார்ந்த வரலாற்று உண்மைகளை ஆதாரங்களுடன் ஆவணமாக்கும் நோக்குடன் தொகுக்கப்பட்டது. கற்றாதாரங்களுடன் நிரூபிக்க முனையும் ஒரு நூல் இது என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்தாலும் கூட, சைவ சமயத்தினின்றும் அதாவது, சிவ சமயத்தின் நின்றும் எவ்வகையிலும் பிரிக்கவே முடியாத தமிழர்தம் வரலாற்றுத் தொன்மைகளையும் ஈழத்தில் தமிழர் தம் வாழ்வியல் இருப்பின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பெருமையையும் மீள ஆழப் பதிவு செய்வதாகவும் உள்ளமை இதனை ஒரு காலத்தேவை கருதி வெளியிடப்பட்ட தொகுப்பாக அடையாளப்படுத்துகிறது எனலாம். இலங்கை இன்று ஆட்சிப்பொறுப்பில் அசுர பலத்துடனும், அதிகார வளத்துடனும் இருக்கும் பௌத்த சிங்களப் பேரினவாத அரசு இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக முழுமையாக நிறுவும் நோக்கிலான சான்றாதாரங்களை உருவாக்கும் நோக்குடன் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் அகழ்வுப் பணி என்ற பெயரில் பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் வழிகாட்டுதலுடன் மேற்கொள்ள முனைவதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு அச்சமூட்டும் சூழலில் இந்த நூலின் வரவை மதம் சார்ந்த பார்வையை ஒரு புறம் வைத்துவிட்டு, தமிழினம் சார் நலன் நோக்கில் அணுகுவது பொருத்தமானது.

மன்னார் சிவபூமி என்பதை நிறுவுவது அல்லது அர்த்தமுள்ள வகையில் ஆதாரப்படுத்த எடுத்தியம்பும் வரலாற்றுக் குறிப்புகள் யாவும் இலங்கையில் தமிழ் மற்றும் தமிழரின் இருப்பையும் தொன்மையையும் ஆதாரபூர்வமாக அறிந்து கொள்ளவும் இது தொடர்பில் புதிய ஆய்வுத் தேடல்களை மேற்கொள்ளவும் இது பெரிதும் உதவும்.

அகத்திய மாமுனிவர் காலம்தொட்டு தி.மு (திருவள்ளுவருக்கு முன்) பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான இராமாயண காலம் முதலான (அதற்கு முன்பும் கூட) புராண இதிகாச காலம்தொட்டு மன்னார் சிவபூமி ஆக இருந்தது என்பதைச் சொல்ல வரும் நூல், மறைமுகமாக சமாந்தரமாக தமிழ் குறித்தும் தமிழர் குறித்தும் பேசுகிறது என்பதை இந்நூலைப் படிப்போர் உணர முடியும்.

இலங்கையின் மறு பெயர் நாகநாடு. நாகர்கள் வாழும் நாடு என்பது இதன் அர்த்தம். அதாவது ஆதி நாகர்கள் தமிழர்களே எனக் கூறும் தொகுப்பாசிரியர் கிறிஸ்துவுக்கு முன் 543 - 505 ஆண்டில் நாகர்கள் பற்றி குறிப்பிடத் தொடங்கியதிலிருந்து சைவத்தோடு தமிழின வரலாற்றையும் சொல்லும்போது பல இடங்களில் வியப்பு ஏற்படவே செய்கிறது. நூலின் 60 ஆம் பக்கம் வரையில் வரலாற்றுச் சுருக்கம் முக்கியமானது. மேலும் ஆய்வுகளுக்கு உந்தும் பல செய்திகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

எனினும் போர்த்துக்கேய வருகைக்குப் பின்னரான அன்னிய இன மத கலாசார பண்பாட்டு ஊடுருவல்களும் ஆக்கிரமிப்புகளும் மன்னாரின் சிவபூமி என்ற அடையாளத்தை எவ்வாறு சிதைக்க முனைந்தது என்ற செய்தியைப் பதிவு செய்வதாகவும் உள்ளது. அறுபதாம் பக்கத்துக்கு மேல் பதிவான விடயங்கள் அனைத்தும் ஒரு சிவபூமி எதிர்கொள்ள நேர்ந்த வரலாற்றுச் சம்பவங்களையே ஒரு சைவ சமய நோக்கில் பதிவு செய்துள்ளது எனக் கருதலாம். அதுவே தொகுதியின் பிரதான நோக்கமாகவும் இருந்திருக்கும் என்பது சர்வ நிச்சயம். 852 பக்கங்கள் வரை கொண்டதாக இத்தொகுப்பு 800 வரையிலான பக்கங்கள் சிவசமயம் சார்ந்த சைவ மக்களுக்கான விடயங்களாகவே உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப 80 பக்கங்கள் சைவத்துடன் தமிழ், தமிழர் சார்ந்து வரலாற்றுக் குறிப்புகளை உள்ளடக்கியமை தமிழர் தம் இருப்பின் தொன்மையை உணர்த்தும் பல உபயோகமான செய்திகளைப் பதிவு செய்தே உள்ளன. அவற்றில் பல விரிவான ஆய்வுகள் மேற்கொள்வதற்கான குறிப்புகளே!

---

# காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்து

○ நன்றி அருள்மொழிவர்மன்

**"காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைந்த**
**கலவி மடவீர் கழற்சென்னி**
**காஞ்சி இருக்கக் கலிங்கங் குலைந்த**
**களப்போர் பாடத் திறமினோ"**



இது கலிங்கத்துப் பரணியில் புலவர் செயங்கொண்டார் "கடைத் திறப்பு" என்ற பகுதியில் அமைத்த பாடலின் வரிகள். இதுவே மறைந்த சரித்திர நாவலாசிரியர் சாண்டில்யன் அவர்களின் வரலாற்று நாவல் "கடல் புறா" வின் முதல் வரி.

சிலேடை தெரிந்தவர்களுக்கு இவ்வரிகளின்பொருள் விளங்கும்.

**ஆசிரியர் செயங்கொண்டார் உரைக்க விழைவது, குலோத்துங்க சோழன் காஞ்சியில் தங்கி இருக்க அவனது ஆணையின் பேரில் அவனது படைகள் கலிங்கத்தை அழித்தன.**

**இதன் இன்னொரு பொருள் பின்வருமாறு அமைகிறது காஞ்சி என்பது மகளிர் இடையில்** அணியும் ஒரு ஆபரணம், கலிங்கம் என்பது உடுத்தும் ஆடை. இதுவே மகளிர் தத்தம் கணவருடன் கலவியில் இருக்கும்போது ஆபரணம் இருக்க ஆடை கலைந்தது.

இராஜராஜ சோழன் ஆட்சியில் பெருகிய கிழக்கத்திய நாடுகள் உடனான கடல் வாணிபத்தை மீண்டும் வளரச் செய்தான்.

மகளிர் நடத்திய கலவிப்போரையும், கலிங்கத்தில் கழற்சென்னியான குலோத்துங்க சோழன் நடத்திய ஆயுதப் போரையும் புலவர் சிலேடையாகப் பாடியுள்ளார்.

மேற்கூறப்பட்ட கலிங்கப் போரை குலோத்துங்கன் தன் படைத் தலைவனான கருணாகரத்தொண்டைமான் தலைமையில் படை நடத்திப் பெற்ற மாபெரும் வெற்றியைப் பற்றி விளக்கும் நூலாகும்.

கருணாகரன், குலோத்துங்க சோழனின் நெருங்கிய நண்பனாவான், இவனே கடாரத்தையும், விஜயநகரத்தையும் குலோத்துங்கன் ஆணையின் பேரில் வென்று, அவ்விரு நாட்டிலும் நல்லாட்சி மலரச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை இல்லாமல் எதிர்காலம் இல்லை!

துரை.சண்முகம்

நாம் அன்றாடம் பார்க்கும் சுற்றுப்புறம் தான், அதையே ஒரு பொழுது மழைக்குப் பிறகு பாருங்கள்.

மறைந்து மங்கிக்கிடந்த இயற்கைக் காட்சிகள் உயிர்ப்பித்தது போலத் தெரியும். மழைநீர் கழுவிய இலை முகங்கள், மணம் விரிந்து நிறம் பொழியும் பல பூக்கள், மழை நனைந்து கிளையமர்ந்து தலை துவட்டும் பறவைகள், வேற்றிடம் தேடி செவ்வரிக்கோடாய் பேரணி தொடங்கும் எறும்புகள், நீர் நிலை நிரம்பி ஊர்விழி கவரும் ஆம்பல்கள் என ஒட்டுமொத்த உயிரினச் சூழலே விழித்துக் கொள்கிறது. இப்படியொரு இயற்கை நம்மைச் சுற்றி இருப்பதையே மறந்து போய், இல்லை கூலி உழைப்பின் கொடுமையால் மறக்கடிக்கப்பட்டு, முழுநேரமும் முதலாளித்துவத்துக்கு உழைத்துக்கொட்டி உழைப்புச் சக்தி, உயிரினச் சக்தியை மட்டுமல்ல பல கோடி மக்களுக்கும், உயிரினங்களுக்கும் வாழ்வாதாரமாக விளங்கும் இயற்கையையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

## இயற்கையின் தற்போதைய பயணப்பாடு எத்தகையது!

மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்ட சமூக அமைப்பால், குறிப்பாக சுரண்டும் வர்க்கத்தின் ஆட்சியிலான முதலாளித்துவ சமூக அமைப்பால் நாம் எம்மை மட்டும் பாதித்துக் கொள்ளவில்லை, இயற்கை அமைப்பையும் சீரழித்து, சிதைத்து வருகிறோம் என்பதை அறிவோமா? இன்றைய உலகில் கோழியையும், ஆடுகளையும், ஆலமரத்தையும் குழந்தைகளுக்கு பாடப் புத்தகத்தில் மட்டுமே காட்டி வளர்க்கும் அளவுக்கு இயற்கையைத் தொலைத்துவிட்டு எதைப் பெறப் போகிறோம் புறத்தில்! இன்னும் சில தலைமுறைக்கு இப்போது மிச்சமிருப்பதுதான் இயற்கை என நம்பும் அளவுக்கு நிலைமையை கேவலமாக்கிவிட்டோம், இதெல்லாம் யார் குற்றம்?


நம் முன்னோர்களின் அனுபவத்தின் வழி, இலக்கியக் காட்சிகள் வழி கொஞ்சம் நம் இயற்கை வளத்தைப் பாருங்கள்.

அன்றைய இயற்கையை எமக்கு அறியத்தருகின்ற இந்த இலக்கியக் காட்சிகளில் எழுதியவர்களின் கற்பனையும், உவமைகளும் கலந்தும், மிகுந்தும் இருந்தாலும் தனித்தனியாக தொடர்பற்றது போல நாம் காணும் இயற்கையின் இயக்கத்தை ஒருங்கே நம் மனக்கண் முன் நிறுத்தும் காட்சிப் படிமங்களில் அந்தக்கால மனிதனின் இயற்கை அறிவும், உணர்வும் நம்மிடம் கற்றலையும், இயற்கையை பேணுதலையும் வேண்டுகின்றன.

## சான்றாகும் சங்கங்கள்

சங்க இலக்கியம் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் ஒரு காட்சி, மலைப்பகுதியில் பாயும் ஆற்றின் வரவில் விரவும் காட்சிகள் எத்தனை?

**'மருதத்துறையின் அழகு'** எனும் தலைப்பிலான அப்பாடல், **'வரையன புன்னாகமும் கரையன சுரபுன்னையும்...'** என நீள்கிறது. அதில் பாய்ந்து வரும் நீரானது, மலைப் பகுதியிலுள்ள புன்னையின் மலர்களையும், ஆற்றங்கரை பகுதியிலுள்ள சுரபுன்னை மலர்களையும், வாள் வீர மரத்து மலர்களையும், வேங்கையின் பூக்களையும், அலரிப் பூக்களையும், காந்தட் பூக்களையும், உதிர்ந்த தோன்றிப் பூக்களையும், தீயென்று எண்ணுமாறு மலர்ந்து, காற்று மோதுவதால் கட்டவிழ்ந்த இதழ்களைக் கொண்ட ஒள்ளிய நீலப் பூக்களையும், மூங்கில்கள் நெருக்கமாக வளர்ந்துள்ள சோலைப் புறங்களிலே அருவி நீரானது நிரப்பிற்று.



மேலும் அலை நுரைகளாகிய மென் குமிழிகளையும், இனிய மணமுடன் கூடிய சந்தனக் குழம்பினையும் உடையதாக வையை நீர்பெருக்கு விளங்கிற்றாம். நமக்குத் தெரிந்த பூக்களின் பெயரைக் கேட்டால், ஒரு நான்கினைச் சொல்வதே அபூர்வம், இந்தக் காட்சிகளைப் பாடிய நல்லந்துவனார் தன்நிலம் அறிந்து இயற்கையின் ஈடுபாட்டால் எத்தனைப் பூக்களை அடுக்குவதன் வழி, ஒரு ஆற்றின் வழி அப்பகுதி உயிரினச் சூழலையே காலம் கடந்தும் நம் கண்முன் நிறுத்துகிறார்.

'எந்த இயற்கை எப்படி போனால் எனக்கென்ன? எத்தனை தண்ணிக்கேன் வேண்டுமானாலும் வாங்கும் வசதி எனக்கிருக்கிறது!' என்று நியாயம் பேசி சோரம் போனவர்களுக்கு மத்தியில் சங்க இலக்கியத்தின் **'ஐங்குறுநூறு'** - இல் மருத நிலத்தைப் பாடிய ஓரம்போகியார் எனும் புலவர் **'கண் பசப்படைந்தது'** எனும் பாடலில் ஒரு வாழ்வியல் காட்சியை விளக்குமிடத்தில் கூட **'கூதிர் ஆயின் தன்கலித்தந்து, வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்...'** அதாவது கூதிர்காலமாகிய ஐப்பசி, கார்த்திகை மாதங்களானால் கலங்கியும், இளவேனிற்காலமாகிய வைகாசி, ஆனி மாதங்களில் நீல மணிபோல தெளிந்தும் நீர் விளங்கும் ஊரனே! எனப் பாடிச் செல்கிறார்.

## எங்கும் கார்ப்பரேட்

எதைப் பார்த்தாலும் இதை தோண்டி விற்றால் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதற்காகவே இயற்கையை ஆராயும் கார்ப்பரேட் வணிக வக்கிரம் மெல்ல மெல்ல மேலிருந்து கீழிறங்கி சாதாரண மனிதர்கள் மத்தியிலும் படிந்துவிடுவதால், இயல்பிலேயே பொது நலனுக்குரியதாய் இருக்கும் இயற்கை வளங்களை ரசிப்பதன் வழி போற்றிப் பாதுகாப்பதற்குப்பதில் சாதாரண மனிதன் வரை அதில் நமக்கும் ஏதும் ஆதாயம் உண்டா? மனம் அலைகிறது. பல பத்து செலவழித்து எந்தப் பல்கலைக்கழகத்திலும் போய் படித்து பட்டம் பெறாத அந்தக் கால மனிதர்கள் இயற்கையை தம் உயிரினச் சூழலின் ஒரு பகுதியாக பார்த்துக் காத்தார்கள்.

கேவலம் ஒரு தாதுமணல் கொள்ளையன் தரும் பிச்சைக் காசுக்காக அவனோடு கூட்டு சேரும் இந்தகால மனிதப் பிறவிகள் முன்னேறியவர்களா? இயற்கையைப் பொதுவில் வைத்துப் பார்த்து, நம்மையும் பார்க்க வைக்க பாடிய அந்தக்கால மனிதர்கள் முன்னேறியவர்களா?!

இயற்கையை ஊடுருவி உணரும் திறனும், அதை நமக்கு உணர்த்தும் திறனும், இத்தனை நுணுக்கமாக இயற்கை வளங்களை, பன்முகங்களை அறிந்து விளங்கச் செய்யும் அந்தக் காலத்து மனிதர்களின் அறிவில் ஒரு சதவிதமாவது இயற்கையைப் பற்றியதில் இன்று நமக்கு உண்டா? விதவிதமான கார்களின் பெயரும், செல்போன்களின் பெயரும், கணினிகளின் பெயரும் தெரிந்த நம் பிள்ளைகளுக்கு நம்மைச் சுற்றியிலுள்ள இயற்கையின் வகைகளை எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்குரிய பதில் நாம் திருப்திப்பட்டுக்கொள்ளும் வகையில் அமையுமா?.


மலைநிலம் போனால் என்ன? விளைநிலம் போனால் என்ன? எந்தக் கார்ப்பரேட்டாவது ஆற்றையும், மலையையும், காட்டையும் கொள்ளையடித்தாலென்ன? கொலை செய்தாலென்ன? இயற்கையாலான தன்னையும் ஒரு நல்ல விலைக்கு எடுத்துக் கொண்டால் போதும், அதற்கேற்ற ஒரு சிலை நிலமாய் நான் கிடக்கத் தயார் என்ற இயற்கைக்கு விரோதமான மனிதனாகவும், மறுகாலனிய சிந்தனை மனிதனை மாற்றியிருப்பதுதான் ஆகப்பெரிய கொடூரம்.

இழந்த இயற்கையை மட்டுமல்ல, இருக்கும் இயற்கை வளத்தையும் காத்திட வேண்டுமெனில், மனித விழுமியங்களுக்கு மட்டுமல்ல, இயற்கைக்கும் விரோதமான இந்த முதலாளித்துவ சமூக அமைப்பை, சுரண்டும் வர்க்க அரசியலைத் தூக்கி எறிய வேண்டும். அதற்கு முதல் தேவை, இயற்கையைப் போற்றும், இயற்கையை பொதுவில் வைத்துக்காக்கும் கம்யூனிச அரசியல் கண்ணோட்டம். ஒரு வகையில் வரலாற்று விதிப்படி இயற்கை தெரிவு செய்யும் பெருவிருப்பும் கம்யூனிசம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமபுரத்தூர் நிஷாந்தன்

# குருபக்தியே வாழ்வின் உயர்நிலை



எம் வாழ்வில் மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் நால்வர் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். அவர்களில் குரு முதன்மையானவர்.

அறியாமை எனும் இருளை அகற்றி வாழ்வில் ஞானம் நல்லொளியை புகட்டி எம்மை வழிப்படுத்துபவரே குரு. குரு எனப்படுபவர் ஆசிரியர் எனவும் அழைக்கப்படுகின்றார். குரு என்பவர் வேதங்களைக் கற்று, சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராக, ஒழுக்கநெறிகளைப் பின்பற்றி வாழ்பவராக விளங்குகின்றார். குரு ஒருவரின் துணையின்றி யாருமே தம் வாழ்வில் உயர்வடைய முடியாது என்பது உண்மையாகும்.

## குருகுலக் கல்வி

முன்னைய காலத்தில் குருகுலக் கல்வி முறையே காணப்பட்டது. கல்வி கற்க வேண்டும் எனும் விருப்பத்துடன் குரு ஒருவரை நாடி வரும் சீடர்களை குருவானவர் தம்மாணவர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களை தம் ஆச்சிரமத்தில் தங்க வைத்து அவர்களுக்கு கல்வி மற்றும் சகல கலைகளையும், ஒழுக்கநெறிகளையும் வாய்மொழி வாயிலாகக் கற்றுக் கொடுப்பார். குருகுலக்கல்வி முடிவடையும் வரைக்கும் குருவோடு தங்கியிருக்கும் சீடன் ஒருவன் குருவிற்கு பணிந்து அவருக்கு பணிவிடைகளை ஆற்றி குருவின் மன விருப்பத்துக்கு உரியவனாக மாறுகின்றான்.

## குருவின் மேன்மை

கடவுளர்களும்; கடவுள் அவதார புருஷர்களும் குருவின் துணைகொண்டு ஞானம் மற்றும் வித்தைகளைக் கற்றுள்ளனர். ஆயகலைகளுக்கு அதிபதியாக விளங்கும் கல்விக் கடவுளாகிய சரஸ்வதி தேவிக்கே ஒரு குரு இருக்கின்றார் என்பது உங்களுக்கு தெரியுமா?. அவரே ஹயக்ரவர். இவ்வளவு ஏன், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூட சாந்தீபனி முனிவரை குருவாகக் கொண்டு கல்வி கற்றுள்ளார். இது போல சவுனாகாதி முனிவர்கள் நால்வருக்கு இறைவன் தட்சணாமூர்த்தியாக இருந்து கல்வி போதித்துள்ளார் என்பதையும் நாமறிவோம். மேலும் ஸ்ரீ இராமருக்கு குருவாக இருந்தவர் வசிட்ட முனிவர். பஞ்சபாண்டவர் மற்றும் கௌரவர்களுக்கு குருவாக விளங்கியர் துரோணர். பிதாமகர் பீஷ்மர் மற்றும் கர்ணன் ஆகியோருக்கு குருவாக இருந்தவர் பகவான் பரசுராமர். மேலும் இராமபிரானின் பிள்ளைகளான லவன் மற்றும் குசனுக்கு குருவாக இருந்து வித்தைகளைக் கற்றுக்கொடுத்தவர் வால்மீகி முனிவர்.


## குரு தட்சணை

குருகுலத்தில் குருவிடம் முழுமையான கல்வியைப் பெறும் சீடர்கள் குருகுலத்தை விட்டு வெளியேறும் முன்னர் குருவுக்குக் குருதட்சணை வழங்கியே செல்ல முடியும். குருவானவர் வேண்டும் குருதட்சணையை சீடர்கள் வழங்கியே ஆக வேண்டும். அவ்வாறு குரு வேண்டிய குருதட்சணைகளை அளித்து சிறப்புப் பெற்றுள்ள சீடர்களின் தன்மைகள் சிலவற்றை நோக்குவோம்.

பகவான் கிருஷ்ணர் தம் குருவாகிய சாந்தீபனி முனிவர் வேண்டியபடி இறந்து போன குருவினது புதல்வனை உயிருடன் மீட்டு வந்து கொடுக்கின்றார். ஏகலைவன் எனும் வில்லாளன் தன் குருவாகிய துரோணர் குருதட்சணையாக வேண்டக் கேட்ட தன் கைப்பெரு விரலை வெட்டிக் கொடுக்கின்றான். குரு துரோணாச்சாரியார் பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களிடம் பாஞ்சால நாட்;டு மன்னன் துருபதனை போரில் வென்று அவனை தேரில் கட்டி இழுத்து வந்து தன் முன்பாக நிறுத்த வேண்டும் எனும் குருதட்சணையை வேண்டுகின்றார். அவ்வாறே பாண்டவர்கள் தம் குரு வேண்டிய குருதட்சணையை அளித்து குருவின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றனர்.

## இறைவனுக்கு நிகரானவர்

குரு என்பவர் இறைவனுக்கு நிகரானவர். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆனாலும், அந்த எழுத்தை கூறச்செய்து அதை எழுதுவித்தவன் குருவே. குரு என்பவரே எம்மை குறையின்றி வாழ வழி செய்பவர். குருவானவர் எப்போதும் சமநிலை பேணுபவர். சீடர்களில் ஏற்றத்தாழ்வு நோக்காதவர் குரு. வாழ்வின்




ஒவ்வொரு கட்டங்களிலும் குருவின் வழிகாட்டலும், ஆசியும் முக்கியமானதாகும். ஏனெனில் குருவே எமக்குத் துணையாக எம் அருகில் இருந்து எம் தவறுகளைத் திருத்தி எம்மை தர்மநெறியில் ஆற்றுப்படுத்துகின்றார்.

வித்தையைக் கற்றுத்தரும் குருவின் பார்வையால் எமது பாவங்கள் யாவும் அகன்று விடும். குருவின் வழிகாட்டலால் தடைகள் யாவும் தகர்த்து போய்விடும். குருவின் ஆசியினால் காரியங்கள் யாவிலும் வெற்றியே நிறைந்திடும். ஆனால் ஒருவன் தனக்கு கல்வி கற்றுத் தந்த குருவை மறந்து போவானால் அவனது வாழ்க்கை அதன் பின் நரக வாழ்க்கையாகும். அது மட்டுமன்றி அவனுக்கும் முக்தி என்பதும் இல்லாமல் போய்விடும். குருவுக்குப் பொய் உரைப்பது மாபெரும் பாவமாம். ஆகவே மாணவப் பருவத்தில் இருந்தே குரு பக்தியை பேணி குருவின் நல்லாசியினால் வாழ்வில் சிறப்புற்று வாழ நாம் முயற்சிக்க வேண்டும்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை

# 'கலை முகம்' தொடங்கி 'கல்வாரிச் சுவடுகள்' வரை



அருட்பணியாளர் நீ.மரிய சேவியர்; தமிழ் கூறும் நல்லுலகு அறிந்த புகழ்பூத்த அறிஞர், கலைஞர், எழுத்தாளர். எண்பத்தொரு ஆண்டுகளாக தமிழும் மறையும் எனத் துடித்து வந்த ஓர் உயர் ஆளுமையின் இதயம் இன்று ஓய்வு பெற்றிருக்கிறது.

எல்லைகள் கடந்து 'கலைத்தூது' சென்ற அமைதிப் புறா நித்தியமாய் அமைதி கொண்டுள்ளது.

யாழ்ப்பாண தமிழ்க் கத்தோலிக்க வரலாறு, சைவ சித்தாந்தம் என்பவற்றில் துறை போந்து முனைவர் நிலையடைந்த புலமையாளராக இருந்தாலும் கலையே அவர் தீராக் காதலாகி நின்றது. ஐம்பத்தைந்து ஆண்டுகளில் கலைத்தூது அழகியல் கல்லூரி, கலைத்தூது கலையகம், கலைத்தூது மணிமண்டபம், கலாமன்ற திறந்த வெளியரங்கு, கலாமுற்றம் எனும் ஓவியக்கூடம், கலைஞான சுரபியான இல்லம் என அவரது கலைக்கனவு பரந்து விரிந்து சென்றது. புலத்தின் பல்வேறு இடங்களில் மட்டுமல்லாது புலம் பெயர்ந்த மக்கள் மத்தியிலும் விழுதுகள் விட்டது இந்தக் கலா விருட்சம்.

இவரது பல்வேறு புலமைசார் மற்றும் கலைப்பணிகளில் துலாம்பரமாக மேலெழுவது இவரது திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை ஆகும். இயேசுவைக் கொலை செய்த குற்றவாளி யாரென அரங்கில் ஒரு நீதிமன்றம் அமைத்து விசாரித்து தீர்ப்பு வழங்குவது முதல், தமிழில் தோன்றிய காப்பியங்களின் நாயகர்களாக இயேசுவை சித்திரிக்கும் முயற்சிவரை திருப்பாடுகளின் காட்சிகளை மேடையேற்றுவதில் பல்வேறு பரிசோதனை முயற்சிகளை இவர் மேற்கொண்டுள்ளார்.

இவருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைக்கும் இடையேயான உறவு நீண்டதாயினும் இவரது பங்களிப்பு கடந்த 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடாத்தப்பட்ட முதலாவது சர்வதேச கிறிஸ்தவ ஆய்வு மாநாட்டிலேயே உச்சம் கண்டது. இம்மாநாட்டுக்கு கிறிஸ்தவ நாகரிகத்துறையுடன் திருமறைக் கலாமன்றம் இணை அனுசரணை வழங்கியிருந்தது. மாநாட்டின் மையப்பொருள் வடிவமைப்பிலிருந்து 'ஒமேகா' என்னும் மௌன ஆற்றுகைவரை இவரது பங்களிப்பு வியாபித்திருந்தது. இவரது புலமையும் தொடர்புகளும் மாநாட்டின் சிறப்புக்கு பெரும்பங்காற்றின.

அடிகளார் எம்மை விட்டுப் பிரிந்துள்ளமை எமக்குப் பெருந்துயர் தருகிறது. அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி நிற்கும் அதேவேளையில் அன்னார் விட்டுச் செல்லும் கிறிஸ்தவக் கலை, இலக்கியப் பங்களிப்புகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை மாணவர்களின் ஆய்வுப் பசிக்கு நல்லுணவாக பல்லாண்டுகளுக்கு அமையுமெனக் கருதுகிறோம். 'கலைத்தூது' நித்திய அமைதியில் இளைப்பாறட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
யாழ். நல்லூரில் இயங்கும்

லிங்கா பெஷன் இன்
மாபெரும் தள்ளுபடி
சேலை வகைகளுக்கு

50% விசேட கழிவுகள்

இரண்டு
சேலை வாங்கினால்
ஒன்று இலவசம்


மேலும் பல ஆடைகளுக்கான
விசேட தள்ளுபடி




இல. 302A, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

Tele No : 021221 4999 www.Lingaa.lk
WhatsApp : 076 644 0722 www.Fb.com/Lingaa.lk

## மரண அறிவித்தல்



பிறப்பு
01 . 12 . 1951

இறப்பு
06 . 04 . 2021

## திரு. இராசலிங்கம் கிருஷ்ணகுமார்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கோப்பாய் வடக்கு இராதம்புவை பிறப்பிடமாகவும் கலம்பரை, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் கிருஷ்ணகுமார் நேற்று (06.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகதீஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் வீரலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், பரமநாதர் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்கந்தகுமார், ஜெயகௌரி, காலஞ்சென்ற ஞானகௌரி, அமுதகௌரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், றெஜினா, காலஞ்சென்ற நரேந்திரன், சிவபாலன் (டென்மார்க்) பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவனேஸ்வரி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் மைத்துனரும், நிமலப்பிரகாஷ் (விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), றொசாந்தி (சாந்தி மார்க்கம்) கம்சானந்தி (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), சசிகலா (ஆசிரியர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி), பிரமளா (களனி பல்கலைக்கழகம்) ஆகியோரின் சித்தப்பாவும், Dr. ஆரணியா (லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை), சரணிகாயினிகா, லவண்யா (டென்மார்க்) சுகன்யா (பொறியியலாளர்) நிரூஜன் (கணக்காளர்), வினோத் (நியூசிலாந்து) முகுந்தன் (ஆசிரியர், யா/ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம்) கெங்காதரன் (அதிபர், யா/கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், மதுசாளினி, கோபிதா, அக்ஷயா, ஜனார்த்தனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2021) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கந்தன்காடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது நடனத்துறை சிரேஷ்ட
விரிவுரையாளர்
திருமதி சீதாலட்சுமி பிரபாகரன்
அவர்களின் அன்பு மாமனார்
அமரர்
**ப.சச்சிதானந்தக் குருக்கள்**
04.04.2021 ஞாயிற்றுக்
கிழமை அன்று காலமான
செய்தி அறிந்து மிகுந்த
வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்
றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
நடனத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கொரோனா தொற்றால் இருவர் சாவு

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்தது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் இறந்தோரின் எண்ணிக்கை588ஆகஅதிகரித்துள்ளது.(எ)

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
## උතුරු සමුපකාර සංවර්ධන බැංකුව

# NCDB
## Northern Co-operative Development Bank

# VACANCIES

**About NCDB**

The Northern Co-operative Development Bank (NCDB) is a provincial federation of district level co-operative unions aiming to strengthen the northern co-operative sector over the long-term. Its main goal is to fulfil the sector's financial needs while providing accompaniment and capacity building. We focus on three key areas: provision of low-cost loans for industrial development and rural credit expansion; technology and marketing; and research.

1. Development Banking Officer - Location: Kaithady, Jaffna
   Salary: Rs. 35,000/mth Contract: 12 months full-time
2. Development Banking Officer (Credit Management) Location: Kaithady, Jaffna,
   Salary: Rs. 35,000/mth, Contract: 6 months full-time

**Knowledge and experience**

- Degree level qualification or equivalent in finance, accounting, or management studies
- Demonstrable experience of, or an appetite to learn about, co-operative development
- Experience of working or building capacity of small and medium organisations
- Experience in a similar financial management and planning role (Position 1)
- Experience in a similar credit management or financial services role (Position 2)

**Skills and abilities**

- Good written and verbal communication skills
- Attention to detail and high level of accuracy
- Good working knowledge of Microsoft Word, Excel, and PowerPoint
- Ability to work in a team and use own initiative
- Systematic and organised approach with an ability to follow things through
- Ability and willingness to work independently and under minimal supervision
- Ability to proactively identify solutions to problems and improve efficiency
- Willingness to travel across the Northern Province independently (travel reimbursed)
- Working knowledge of Tamil and English.
- Ability to deliver information, advice, and recommendations in an appropriate and effective way relevant to the target audience (Position 1)
- Good negotiation skills (Position 2)

Applicants should send their CV and two references to janaki23@gmail.com by Wednesday 14th April 2021, with the subject title in an application.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த

# இலவச மத்திய மருந்தகத்தை விரைந்து மீள ஆரம்பியுங்கள்!

## வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

**வலி.தென்மேற்கு, ஏப். 7**

**நவாலி ஹேமலதா ஞாபகார்த்த இலவச மத்திய மருந்தகத்தை மீளத் திறப்பதாக உறுதியளித்தும் இதுவரை மேற்படி மருத்துவ சேவையை ஆரம்பிக்க வடக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் பணிப்புரை வழங்காதமை வலி. தென்மெற்கு பிரதேசத்துக்குட்பட்ட நவாலி, கட்டுடை மற்றும் ஆனைக்கோட்டை மக்களை முழுமையாக ஏமாற்றமடையச் செய்துள்ளது.**

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளரும் உறுப்பினருமான சி.மகேந்திரன் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2013 ஆம் ஆண்டு முதல் மக்களுக்கான இலவச ஆயுள்வேத மருத்துவ சேவையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் வட மாகாண சுதேச மருத்துவத் துறை ஆணையாளரும் இணைந்த வகையில் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த இலவச மத்திய மருந்தகத்தை ஆரம்பித்து வாரத்தில் திங்கள் மற்றும் வியாழன் ஆகிய இரு நாள்கள் மருத்துவ சேவை இடம்பெற்றது.

இதன்மூலம் வாரத்தில் இருநாள்களில் 150 க்கும் மேற்பட்ட பொது மக்கள். சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எனப் பலர் பயன்பெற்றனர்.

பின்னர் ஹேமலதா மருத்துவமனை சில நிலவிரிப்புத் தேவைகளை முன்னிறுத்த வேண்டும் எனக் கோரி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இதன் பின்னர் ஹேமலதா ஞாபகார்த்த நிறுவனம் கட்டடத்தை மீளப் புனரமைத்து முழுமையான வசதிகள் வழங்கப்பட்ட பின்னர் நேரடியாக சுதேச மருத்துவ ஆணையாளரைத் தொடர்புகொண்டபோது மருத்துவமனை விரைவில் திறந்து மக்கள் சேவைக்கு அனுமதிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

எனினும் இரு மாதங்கள் கடந்த நிலையிலும் மருத்துவ சேவை தொடரவில்லை என்பது எமது மக்களை முழுமையாக ஏமாற்றமடையச் செய்துள்ளது -என்றார்.

( று-50)



## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 7

யாழ்ப்பாணம் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் க. திருவாசகன் கலந்துகொண்டார்.

இ.கிருத்தீஸ் (139), பி.பிந்துஜன் (130), ம.அஜீனா (128) மற்றும் ர.விஷான் (120) ஆகிய மாணவர்களே கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியை ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஏப். 7


நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறிக்கு புதிய மாணவர்களை சேர்ப்பதற்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை இலங்கை நூலக சங்கம் கோரியுள்ளது.

குறித்த விண்ணப்பத்துக்கான தகவல்கள் அந்தந்த பிரதேசத்திலுள்ள பொது நூலகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எனவே கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இலங்கை நூலக சங்கத்தின், இணையத்தளத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் 200 ரூபாவுக்கான காசுக்கட்டளையை இணைத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சங்க கல்வி அலுவலர் சீ.என். கே.அழகக்கோன் தெரிவித்துள்ளார்.

(யு-9)

## வவு.வில் சமுர்த்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டமைக்கு ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஏப். 7

வவுனியா செட்டிக்குளத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை பொதுமகன் ஒருவர் தாக்கியமையைக் கண்டித்து செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம், பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச உத்தியோகத்தர்களாகிய தாம் கடமைக்கு செல்வதற்கு பாதுகாப்பு தேவை எனவும் தாக்கிய நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் கிராம சேவகர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது வன்முறையாளர்களால் அரச ஊழியர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், அரச உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மீதான தொடர் தாக்குதலுக்கு கடும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் போன்ற கோசங்களை எழுப்பியவாறும் பதாகைகளை ஏந்தியவாறும் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்ட முடிவில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலாளர் கு. சுலோஜனாவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி சமுர்த்தி உத்தியோகத்தரை தாக்கிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-110)

## வளங்கள் அற்ற ச.ச.நிலையங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளவேண்டாம்

### யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 7

பௌதீக வளம், நிதி வளம் மற்றும் மனித வளம் இல்லாத சனசமூக நிலையங்களுக்கு வீதி சீரமைப்பு வேலைகளை வழங்குவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

சனசமூக நிலையங்களால் மேற்கொள்ளப்படும், வேலைகள் தரம்குறைந்த நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

பௌதீக வளம் நிதி வளம் மற்றும் மனித வளம் ஆகியவை இல்லாத சனசமூக நிலையங்கள், வேலைகளை மேற்கொள்வதாக சபையுடன், ஒப்பந்தம் செய்த பின்னர் தரகுப் பணத்துக்காக உப ஒப்பந்த மொன்றின் மூலம் வேலையை வேறொருவருக்கு வழங்குவதை அவதானிக்க முடிந்துள்ளது.

எனவே வீதி சீரமைப்பு வேலைகளை வழங்கும் போது சபையினர் இது தொடர்பில் அனைத்து விடயங்களையும் கவனத்தில்கொள்ள வேண்டும் -என்றார்.

(ஐ-9)

## ஜோசப் ஆண்டகைக்காக வலி. கிழக்கில் துக்கதினம்




யாழ்ப்பாணம், ஏப். 7

மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தமிழ்த் தேசிய மனித நேயப்பணியை நினைவுகூர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் கறுப்புக்கொடிகள் பிரதேச சபையால் பறக்கவிடப்பட்டன. இது தொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை [illegible] தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார் [illegible] வது; ஆயரின் இறுதி வணக்க நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில் நேற்றுமுன்தினம் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு சிவில் அமைப்புகளால் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது. இதனால் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் முக்கிய இடங்களில் கறுப்புக் கொடிகளை பறக்க விட்டு சமயங்களுக்கு அப்பால் தமிழ் மக்க[illegible] கொடுத்த [illegible] அஞ்சலிக்கின்றோம் -என்றார்.

(வ-இ)

## 72 பேரில் எவருக்கும் கொரோனா இல்லை

**சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் உட்பட 72 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் கடந்த வியாழக்கிழமை 72பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் இரண்டாம் கட்ட சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தனிமைப்படுத்தப்பட்டவர்களும், வெளி மாவட்ட பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் மாணவர்களும் உள்ளடங்கியிருந்தனர். இவர்களுடைய பி.சி.ஆர் சோதனை முடிவுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகியிருந்தன. இதில் அவர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்று பாதிப்பு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

(வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளகப் போக்குவரத்து நயினையில் சீராகியது!

யாழ்ப்பாணம், ஏப். 7

நயினாதீவில் தடைப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் உள்ளகப் பேருந்து சேவை சீர்செய்யப்பட்டு நேற்று வழமைக்குத் திரும்பியது.

பேருந்தில் ஏற்பட்ட சில திருத்த வேலைகள் காரணமாக கடந்த சில தினங்களாக குறித்த சேவை தடைப்பட்டது. இதனால், கடந்த சில நாள்களாக உள்ளகப் போக்கு வரத்தில் நயினாதீவு மக்கள் பல அசௌக ரியங்களைச் சந்தித்தனர். இந்த நிலையி லேயே குறித்த பேருந்து சீர்செய்யப்பட்டு, அதன் சேவை நேற்று வழமைக்குத் திரும் பியது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-319)

வடக்கு, கிழக்கில்

# பொருளாதார மத்திய நிலையங்களை விரைவில் திறக்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 7

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களைத் திறப்பதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் நீண்ட இழுபறி யின் பின்னர் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இன்னமும் திறக்கப்படாமல் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைய வுள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் முதற்கட்ட கட்டு மானப் பணிகள் நிறை வற்று ள்ளன.

அதேபோல் கிழக்கு மாகாணத் தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பொருளா தார மத்திய நிலையமும் திறக் கப்படவில்லை.

இவை மூன்றையும் திறப்ப தற் கும், நிர்வாக மற்றும் முகாமைத் துவ நிதியத்தை நிறுவுவதற்கும் முறையான பொறிமுறையைப் பின்பற்றி பொருளாதார மத் திய நிலை யத்தின் கடைக ளைப் பங்கீடு செய்வதற்கும் விவசாய அமைச்சர் மஹிந்தா னந்த சமர்ப்பித்த யோச னைக்கு அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது. (ஒ.இ)

## மேல்மாகாணத்தில் தனியார் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஏப்.7

மேல் மாகாணத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் தனியார் கல்வி வகுப் புகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று அறி வித்துள்ளார்.

கடந்த ஜனவரி 21 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் தனியார் வகுப்புக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சுற்று நிரூபம் வெளியிடப்பட்டது. எனினும் சகல பாட சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு இரு வாரங்களின் பின்னரே தனியார் வகுப் புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங் கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய கடந்த வாரம் மேல் மாகா ணத்தில் சகல வகுப்புக்களுக்கும் கற் பித்தல் செயற்பாடுகள் ஆரம்பமாகி யுள்ள நிலையில், தற்போது தனியார் வகுப்புக்களை ஆரம்பிக்கவும் அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## தமிழக சட்டசபைக்கு நேற்றுத் தேர்தல்!

72 வீதமான வாக்குகள் பதிவு



சென்னை, ஏப். 7

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்குமான சட்டப் பேரவைத் தேர்தல் நேற்று செவ் வாய்க்கிழமை நடைபெற்றது. காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை வாக்குப் பதிவுகள் இடம்பெற்றன. அண்ணளவாக 72 சதவீத வாக்குகள் பதிவாகின என்று தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்தார். தமிழகம் முழுவதும் 37 ஆயிரம் இடங்க ளில் 88 ஆயிரத்து 937 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. பாதுகாப்பு பணிகளுக் காக 1.58 லட்சம் பொலிஸார் மற்றும் துணை இராணுவத்தினர் ஈடுபடுத் தப்பட்டு உச்சக்கட்டப் பாதுகாப் புக்கு மத்தியில் தேர்தல் இடம்பெற் றது.

பிரபல சினிமா நட்சத்திரமான விஜய், துவிச்சக்கர வண்டியில் சென்று தனது வாக்கைப் பதிவு செய்தார். எரிபொருள் விலையேற் றம் தமிழகத்தில் ஆளும் அ.தி.மு. கவுக்கும், மத்தியில் பா.ஜ.க வுக் கும் எதிராகப் பெரும் அதிருப் தியை ஏற்படுத்தியுள்ள நிலையில், தனது எதிர்ப்பையும் பதிவுசெய் யும் வகையிலேயே அவர் துவிச் சக்கர வண்டியில் சென்று வாக் கைப் பதிவுசெய்தார் என்று தெரி விக்கப்படுகின்றது. (ம)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.09.1975 — மறைவு 31.03.2019

7ம் வட்டாரம் புங்குடுதீவினைப் பிறப்பிடமாகவும் பள்ளம்புலம் சரவணை கிழக்கினை வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் நல்லதம்பி சசிதரன்

(துபால் அலுவலகம், புங்குடுதீவு)

இன்றுபோல் இருக்குதையா
இருந்து நாம் மகிழ்ந்த நாட்கள்
சென்றது ஈராண்டு
சென்றதும் அறியார் போன்று ...

நெஞ்சுளே உம்மை வைத்து
நினைவெலாம் உமதாய்க் கொண்டு
வெம்பி நாம் வடிக்கும் கண்ணீர்
விலகவே இல்லை ஐயா....

ஆண்டுதான் இரண்ட தென்ன - எம்
ஆருயிர் பிரியு மட்டும்
வேண்டியே வணங்கி நிற்போம்
வேந்தனே அமைதி கொள்வாய்.....

ஓம் சாந்தி...! சாந்தி...! சாந்தி...!

பள்ளம்புலம்
சரவணை கிழக்கு
9ம் வட்டாரம்.

என்றும் நீங்கா நினைவுடன் நிற்கும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 19.09.1972 — மறைவு 06.04.2021

### அமரர் செல்வரத்தினம் நாகராஜன் (ராஜன்)

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வவுனியா உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் நாகராஜன் (ராஜன்) வவுனியாவில் 06.04.2021 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் (முன்னாள் ஆசிரியர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை) திருமதி புஸ்பலீலாவதி ஆகியோரின் அன்பு மகனும், சுகிர்தாவின் அன்பு கணவரும், கீர்த்திகன், சாதுரியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாகரன் (கரன்) செல்வாகரன் (செல்வன்) அன்பரசி (ரசி) கலையரசி (கலா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்சன், அன்ரன் டானியல், விஜிதா, செல்வசுதாயினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 08.04.2021 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

தகவல்-சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 23 - 08 - 1983

ஆண்டவன் அடியில் 09 - 03 - 2021

## அமரர் தனபாலசிங்கம் அற்புதானந்தன் (அற்புதன்)

மல்லாவி புத்துவெட்டுவானைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல் மற்றும் London Liverpool ஐ வசிப்பிடமாகக் கொண்ட வருமான அமரர் தனபாலசிங்கம் அற்புதானந்தன் (அற்புதன்) அவர்கள் கடந்த 09.03.2021 செவ்வாய்க்கிழமை London Liverpool அகால மரணமடைந்தார்.

அன்னார் V.S. தனபாலசிங்கம் J.P. ரதிதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுபேந்திரன் , திலகவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், அனுஷியாவின் (London), கணவரும் பவிஷனா (London), கைதீபன் (London) உகேஷ் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானி, பவானந்தன், பத்மானந்தன் (Swiss), குஹதர்ஸினி, சுதானந்தன் (London), சுமித்திராராணி (Swiss), ஈஸ்வரானந்தன், சுஜானந்த் (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், நகுலேஸ்வரி, விக்கினேஸ்வரன், தங்கராணி (Swiss), அனுஷா (London), இராதாகிருஷ்ணன் (Swiss) பிரதீபா, செல்வபவனி (London) ஆகியோரின் அன்புமைத்துனரும் சிவராஜா, பரராஜசிங்கம், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், மற்றும் குணபாலசிங்கம் (Germany) நித்தியராசா (Germany), சரோஜினிதேவி, கமலாதேவி, கானகதேவி, லங்காதேவி ஆகியோரின் பெறாமகனும் மணிமேகலாதேவி (Germany), ஜெகதாம்பாள், சரோஜினி தேவி, ரேணுகாதேவி கௌசலாதேவி, லகுநாதன் - சந்திரகலா ஆகியோரின் மருமகனும் குணாநிதி, மயூரன், யுகவர்மன், மிகிர்சா, சஜீபா, அஜித்தா, லிதுர்சன், மதுமிதா, தேசிகன், யஸ்மிக்கா (Swiss), றஷ்மிதன் (Swiss) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற அபிராமி மற்றும் கிரிஷா, மதுஷா, மிதுஷா, கிருத்திகன், துஷாளினி, தர்ஷிகன் (Swiss), சுதர்சிகா (Swiss), பிரவீண், தார்மீகன், மதுஷிகா, டெனிஷா (London), கிரிஷா (London) மதுஷா (London), தனுஷன் ஆகியோரின் சிறிய தந்தையாரும், சுதர்சனா வின் மைத்துனரும், பவிஷாவின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 08.04.2021 வியாழக்கிழமை London நேரப்படி 11.00am மணிக்கு நடை பெற்று பூதவுடல் London Liverpool இல் எரியூட்டு மயானத்தில் 2.00pm மணிக்கு தகனம் செய்யப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தனபாலசிங்கம் (J.P) | 0094 776 933 709 |
| ஈசன் | 0094 766 611 247 |
| ராதாகிருஸ்ணன் | 0041 788 835 801 |
| சுதானந்தன் | 0044 790 431 7724 |
| சுஜானந்த் | 0044 794 037 2579 |

தகவல் - குடும்பத்தினர்
No . 37 , பார்க்குழி லேன்,
தோணிக்கல்,
வவுனியா.

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 - 08 - 1944

இறப்பு 02 - 04 - 2021

## யேசுதாசன் யுஸ்ரீனம்மா
### (மகராசம்பிள்ளை ஒஸ்தீனம்மா )

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், மெலிஞ்சிமுனை, குருநகர், பிரான்ஸ் Nevers ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட யேசுதாசன் யுஸ்ரீனம்மா அவர்கள் 02-04-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பிரகாசம் கித்தோரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சூசை ஆனந்தி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற சூசை யேசுதாசன் அவர்களின் அன்பு மனைவியும், பத்திமா, சேகர், புனிதன், கிறிஸ்ரெலா, குமார், பிரியா, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற லில்லி, துரைசிங்கம் மற்றும் யோண்பிள்ளை ராணி, சகாயன், ஜெசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிறிஸ்ரி, சிராணி, றஜனா, ஆனந்தன், பிரியா, நீதி, அன்ரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கிறிஸ்தோபர், சின்னக்கிளி அல்பேட் மற்றும் நேசமலர், ஜெயா, அற்புதராணி, யேசுதாசன், மார்க் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தங்கம், எட்வீனம்மா ஆகியோரின் பாசமிகு உடன்பிறவாச் சகோதரியும், ஸ்ராலின், ஜெனனி, சூரியா, செகானி, சேந்தன், செந்தூரா, எலின், யேந்தன், ஜெனிபன், றோஷானி, மதுசன், யுசானா, பேடினன், சிந்தி, செலின், தருஷா, மாலியா, டானியா, றீற்ரா, காடினன், ஆகாஷன், ஆதிரன், பிரகாஷ், சுகன்யா ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், மரியம்(எல்லா) அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.04.2021 அன்று பிரான்ஸ் Nevers இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஜோன்பிள்ளை (சகோதரர்) | 076 802 6776 |
| சகாயன் (சகோதரர்) | 0777 322 9728 |
| லிங்கன் (பெறாமகன்) | 075 [illegible] 9450 |

தகவல்:
குடும்பத்தினர்

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை

077 476 2922, 077 998 1690

# சிவபூமி முதியோர் இல்லம்
# தொல்புரம், சுழிபுரம்

எமது சிவபூமி முதியோர் இல்லம் 07.04.2007 இல் ஆரம்பிக்கப்பட்டது
இன்றைய ஆண்டுவிழா நாளில் எமக்கு ஆசிகளையும்,
ஆதரவுகளையும் வழங்கிய அனைவருக்கும்
எமது இதயபூர்மான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர்

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.

## புதிய அனுமதி

- அறுபது வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- சைவபோசனம் மட்டும்
- எவரது ஆதரவும் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை

நேர்முக உரையாடல் மூலம் பொருத்தமானவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்

**தலைமை அலுவலகம்**
**கோண்டாவில்**
Sivapoomi@Gmail.com
T.P.:- 021 222 7938

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.

# மரண அறிவித்தல்



## திரு. வேலாயுதன் சிவஞானசோதி

B.A(Econ) Hons, MSc(Bradford), U.K FCMA (London), FCA (Sri Lanka), Chartered Accountant

(முன்னாள் செயலாளர் தேசிய கொள்கைகள். பொருளாதார அபிவிருத்தி. மீள்குடியேற்றம். புனர்வாழ்வளிப்பு . வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தற்போதைய செயலாளர். மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொதுசேவை ஆணைக்குழு அங்கத்தவர்)

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் 05.04.2021 அன்று மாலை சிவபதம் எய்தினார் இவர் காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணி திரு. வேலாயுதன் மற்றும் திருமதி பொன்னம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரனும். காலஞ்சென்ற திரு.சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி குமுதினி அவர்களின் அன்பு மருமகனும், குறமகளின் அன்புக் கணவரும். பிரபல சட்டத்தரணி திரு. தேவசேனாதிபதி மற்றும் தேசிய லொத்தர் சபையின் ஓய்வுபெற்ற பிரதி பொது முகாமை யாளர். திரு.சுந்தரேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரனும். கௌரி. சுமதி அவர்களின் மைத்துனரும். மயுரதன் -சிங்கப்பூர். சிவசங்கரன் -கனடா. சிவகாந்தன். வேல்விழி - கனடா அவர்களின் மைத்துனரும். பிரதாப். துஷ்யந்தன் அவர்களின் சித்தப்பாவும். கோகுல். சுபஹரி. சிவராம். அருண்சிவா அவர்களின் மாமாவும். பிரணவன். பைரவி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் புதன்கிழமை 9.00-6.00 மணிவரை யும் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை (Jayaratna VIP Palour வைக்கப்பட்டு) பிற்பகல் 1.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி 4.00 மணி யளவில் தகனம் செய்யப்படும்.

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சுக்களில் - தேசிய கொள்கைகள். பொருளாதார அபிவிருத்தி. மீள்குடியேற்றம். புனர்வாழ்வளிப்பு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. சுற்றுலா துறை அபிவிருத்தி அமைச்சு. மீள்குடியேற்ற அமைச்சு. பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றில் செயலாளராகவும் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார் தற்போது மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாள ராகவும் பொதுச்சேவை ஆணைக்குழவின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார்.

தகவல் :
குறமகள் (மனைவி - 0779007623)
தேவசேனாதிபதி (சகோதரன் - 0771133400)
சுந்தரேஸ்வரன் (சகோதரன் - 0773850841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு

## விலைக்கேள்விக்கானகோரல் - 2021

1. வடக்கு மாகாண மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவுக்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான மற்றும் தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்வியினைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசியபோட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது
4. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2061423) மாவட்ட பொது வைத்தியசாலையில் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்-தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 3000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 07.04.2021 தொடக்கம் 27.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் 28.04.2021 ஆந் திகதி 9.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மாவட்டபொது வைத்தியசாலை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக் கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 28.04.2021 ஆம் திகதி 09..30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக் கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தி யசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
7. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்ட பத்தில் 19.04.2021 ஆம் திகதி 9.00 மணிக்கு நடைபெறும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்விஅடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| DGH/Mu/PSDG/2021/01 | Improvement of Internal Road (635m) | 13.55 | 147Days | C5 or C6 | 140,000.00 | 11.08.2021 வரை |

வைத்திய கலாநிதி. J.M.Nilakshan
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு

# கேள்வி அறிவித்தல்

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா

## (PSDG-2021)

01. தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி வேலைகளிற்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு. சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் 04 / 2016 (ii) ம் இலக்க 08.05.2019ம் திகதிய பொதுச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை மேற்கொண்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லு படியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்

04. தேவையான தகமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக் குளம் வவுனியா** (தொலைபேசி: 0242225737, தொலைநகல் - 0242050067, மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 21.04.2021 திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் தலைவர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம். வவுனியா எனும் இடத்தில் 07.04.2021 திகதியி லிருந்து 21.04.2021 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/= ( வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம் வவுனியா எனும் முகவரிக்கு 21.04.2021 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னி லையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று நாட்கள் 23.06.2021) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ)மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியா கும் காலம் |
| NP/14/43(5)/5.5/3-6/21 | நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்(RO Plant) | 2.768 மில்லியன் | 03 மாதங்கள் | C8 & C7 வீதி வேலை | 28,000.00 | 23.06.2021 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 19.04.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக் கட்டிடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**நெளுக்குளம், வவுனியா.**
07.04.2021

# முக்கிய அறிவித்தல்

*அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே !*

எமது கட்சியை இம்மாதம் 30 ஆம் திகதியளவில் அறி விக்கவுள்ளதால் எமது கட்சியில் இணைய விரும்பும் நாட்டு பற்றாளர்கள், பிறகட்சிகளில் மாற்று கருத்துடைய வர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளி கள் மற்றும் துடிப்புள்ள ஆண், பெண் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பெரும்பாலானோரின் வேண்டுகோளுக்கு இணங்க சகலமாவட்டங்களி லிருந்தும் ஒவ்வொரு உறுப்பினர் கட்சியில் செயற்குழு உறுப்பினராக சேர்க்கப்படுவார்கள். இதில் இணையும் தகுதி வாய்ந்த அங்கத்தவர்கள் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்படுவார்கள்

**தொடர்பு: 32, மஞ்சவனப்பதி வீதி,**
**கொக்குவில்.**
021 222 3460
021 222 3480
Whatsapp 077 747 4111

*தகவல்:*
**தேசமானிய லயன்**
**அருள் ஜெயந்திரன்**
*(ஸ்தாபகர் - அகில இலங்கை மக்கள் எழுட்சி கட்சி)*

# 31 ஆம் நாள் நினைவு நாளும் நன்றி நவிலலும்



பிறப்பு 16.08.1937
இறப்பு 10.03.2021

கடந்த 10.03.2021 புதன்கிழமை அன்று கனடாவில் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சேதுகாவலர் விநாயகமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.04.2021) புதன்கிழமையும் வீட்டுக்கிரியைகள் 09.04.2021 வெள்ளிக் கிழமையும் கனடாவில் நடைபெறும்.
எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்த வர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் ஏனைய வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**077 064 8643**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



## நவரட்ணம் அருட்சோதி

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை யைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நவ ரட்ணம் - அருட்சோதி நேற்று (06.04.2021) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் நவரட்ணம் காலஞ்சென்ற சந்திரேஸ்வரி தம் பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ராதிகாவின் அன்புக் கணவரும், தனஞ்ஜெயன், சஞ்ஜீவன், சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், தக்ஷினி, காலஞ்சென்ற தவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரேணுகா, ரஞ்சித், ரவித்தா, ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும், மகாலிங்கம், ஜீவயோகினி, நாகநாதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், ஆரணிகாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 06 - 1945



மறைவு 05 - 04 - 2021

### திருமதி S.பவானி

அரியாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவியும், இலங்கை தொலைத்தொடர்பு திணைக்கள முன்னாள் உத்தியோகத்தருமான திருமதி.S.பவானி கடந்த (05.04.2021) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு, இராசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தமயந்தி, சேகர், மற்றும் சசி(சுவிஸ்) ரகு, கலா (லண்டன்) கண்ணன் (லண்டன்) ஆகியோரின் மூத்த சகோதரியும், காலஞ்சென்ற சபாம் பிள்ளையின் அன்பு மனைவியும், இரவீந்திர ராஜ், மகேந்திரராஜ் (அவுஸ்திரேலியா)காலஞ்சென்ற சுரேந்திரராஜ், மற்றும் ஜெகேந்திர ராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யாழினி, துளசி (அவுஸ்திரேலியா) ரேணுகா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியும், சாருஜன் (அவுஸ்திரேலியா) ருக்ஷன் (அவுஸ்திரேலியா) சனோகா, பிரவின் (லண்டன்) ஸ்டெபி, சாரா, அபிகாயில் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல: 18/1 கிழக்கு அரியாலை வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இன்று (07.04.2021) மு.ப 10 மணிக்கு அக்கினியில் சங்கமமாகும்.

தகவல்: மகன்
077 9018 413

## வாடகைக்கு

கே.கே. எஸ் வீதியில் தாவடி ஐயப்பன் கோவில் அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு .

தொடர்பு: 077 476 2922
077 615 5794

## வேலையாட்கள் தேவை

புத்தூரில் புதிதாக ஆரம்பிக்கப்படும் யூஸ் கடையொன்றிற்கு யூஸ் போட தெரிந்த வேலையாள் தேவை. சோட்டீஸ், பலகாரங்கள், சுவீட்ஸ், செய்ய தெரிந்தவர்களும் தேவை (சனி, ஞாயிறு பகுதிநேரமாக வேலை செய்பவர்களும் தேவை)

தொடர்பு 077 138 9631

## துயர் பகிர்கின்றோம்

சங்க உறுப்பினர் **திருமதி சுபவதனி ஜெகானந்தன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### கதிரன் கதிரவேலு

அவர்கள் 05.04.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்
சாவகச்சேரி

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாதசுந்தரமூர்த்தி சரஸ்வதி



பிறப்பு 10.02.1933 — இறப்பு 06.04.2021

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் வடக்கு மற்றும் கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது உரும்பிராயில் வசித்தவருமான பாக்கியம் என அன்பாக அழைக்கப்படும் திருமதி சிவபாதசுந்தரமூர்த்தி சரஸ்வதி அவர்கள் நேற்று (06.04.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா பொன்னம்மா தம்பதியரின் ஆசை மகளும், காலஞ்சென்ற செல்லையா நாகம்மா தம்பதியரின் ஆசைமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரமூர்த்தியின் பாசமிகு மனைவியும், அன்னலட்சுமி, இராசரத்தினம், சின்னத்தம்பி, வைத்திலிங்கம் பரிமளம், சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரி மனோகரி (ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ வயாவிளான் மத்திய கல்லூரி) வசந்தகௌரி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ஏழாலை மகா வித்தியாலயம்) சிவானந்தகௌரி (ஹொலண்ட்) சிவநேசகௌரி (கனடா) சிவபாலகௌரி (லண்டன்) சிவஞானகௌரி (ஜேர்மன்) இராஜமார்த்தாண்டமூர்த்தி (பிரான்ஸ்) வீரமாத்தாண்டமூர்த்தி (கனடா) காலஞ்சென்ற ஞானபாஸ்கரமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீதரன், விக்கினேஸ்வரன் (உப அதிபர், யா/சந்திரோதய வித்தியாலயம்) செல்வக்குமார் (ஹொலண்ட்), குகனேசன் (கனடா) ரதிகரன் (லண்டன்) சந்திரதாஸ் (ஜேர்மனி) ஜெயசுதா (பிரான்ஸ்) வித்தியமாலா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரண்ஜன் (உரிமையாளர் - அனாமித்ரா Travels), தனஞ்சயன் (பொறியியளாளர்-லண்டன்), காருன்ஜன் (கணினி பீட மடாணவன் SLIIT) ரிசிகேசன் (வெளிக்கள உத்தியோகத்தர், வன பரிபாலன சபை), மதுராங்கன் (முகாமைத்துவ உதவியாளர், வவுனியா நீதி மன்றம்), அருந்தா, செல்வா சுவர்ணலதா (பிரியா) கனடா ரவீஷ் ரதிந்தா, சஞ்சிகன், சஞ்சிகா, சுபாஷிகா, அபினயா, அகல்யா, அக்ஷயா, அனுஷியா, அபிஷன் திமத்தி (விதுஷ்) ஜோசுவா (தினேஷ்) டெபோறா (சகானா) பிருந்தினி, தீபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஞ்சுகனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2021) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04, கற்புலம் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
021 223 0588

## 10 ரூபாவால் குறைகிறது சிவப்புச் சீனி

கொழும்பு, ஏப். 7

சிவப்புச் சீனியின் விலை 10 ரூபாவால் குறையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டே இந்த விலைக் குறைப்புச் செய்யப்படவுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார். (ம)

## போதையில் சாரத்தியம்; 3 சாரதிகளுக்கு தண்டம்

கொடிகாமம், ஏப்.7

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட பகுதியில் போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் மூன்று நபர்களுக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிரான வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே போதையில் வாகனம் செலுத்தியமைக்காக மூவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 75 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும், 40 மணித்தியாலய சமூகப் பணியை மேற்கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டது. (ம-159)

## 94 ஆயிரத்தை நெருங்கும் கொரோனா தொற்றாளர்கள்

கொழும்பு, ஏப்.7

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிவரை நாட்டில் புதிதாக 95 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 93 ஆயிரத்து 690 ஆக உயர்ந்துள்ளது. (எ)

## முப்பது குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

வலி.தெற்கு, ஏப்.7

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 30 குடும்பங்களுக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன், சந்நிதியான் ஆச்சிரமத்திடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு மற்றும் புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கே இந்த உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. வலி. தெற்கு தவிசாளர் க.தர்ஷன், சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகன் சுவாமிகள், கிராம அலுவலர் அகிலன் மற்றும் பொதுச்சுகாதரப் பரிசோதகர் எனப் பலர் கலந்து கொண்டு மக்களிடம் இந்த உதவிப் பொருள்களைக் கையளித்தனர். (ற-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.7
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு அச்சுறுத்தல் உள்ளது. அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும். இவ்வாறு குரல் அற்றவர்களின் குரல் அமைப்பும், தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அங்கு கருத்துத் தெரிவித்த குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் பேச்சாளரும், முன்னாள் அரசியல் கைதியுமான மு. கோமகன் தெரிவித்ததாவது:
அநுராதபுரம் சிறைச்சாலையில் பலத்த நெருக்கடிக்கு மத்தியில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ள னர். அந்தச் சிறைக்குப் புதிதாகக் கொண்டு வரப்படும் சிங்களக் கைதிகள், தமிழ் அரசியல் கைதிகளைக் கொட்டியா என்று கூறி அச்சுறுத்தும் செயற்பாடுகள் அதி கரித்துள்ளன. இது ஒரு முறுகல் நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (எ-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அரசின்...
இலங்கையில் போர் முடிவடைந்த பின்னர் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தன. அப்போது ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ச அரசு, ஜனாதிபதி செயலணி ஊடாகஅரசசார்பற்றநிறுவனங்களைக் கட்டுப்படுத்தியிருந்தது. அத்துடன் ஜனாதிபதி செயலணி ஊடாகக் கண்காணிப்பையும் மேற்கொண்டது.
நல்லாட்சி அரசின் காலத்தில் இந்தக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து நிதிகளைப் பெற்று செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான நடைமுறைகளும் இலகுபடுத்தப்பட்டிருந்தன.
ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போது கோத்தாபய அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக என்று கூறிக்கொண்டு, அரச சார்பற்ற நிறுவனங்களை பாதுகாப்பு அமைச்சு ஊடாக, புலனாய்வாளர்கள் ஊடாக கண்காணிப்பதற்குரிய ஒழுங்குகளை அரசு மேற்கொண்டுள்ளது.
வெளிநாடுகளிலிருந்து நிதிகளைப் பெற்றுத் திட்டங்களை மேற்கொள்ளும் ஒவ்வொரு தடவையும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலணியின் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது. (ஒ.5)

### தவறான...
மன விரக்தியில் இருந்த இவர் இந்தத் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26,25)

### வழுக்கி....
உயிரிழந்துள்ளார்.
கர்ப்பிணியான இவர் சுகவீனம் காரணமாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் காலை மலசலகூடம் செல்லும் போது இவர் வழுக்கி விழுந்துள்ளார். அதையடுத்து பாதிப்படைந்த அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் மாலை இவர் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

### பெட்டி...
சேர்ந்த பி.செல்வராணி (வயது-29) என்ற இருபிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 31ஆம் திகதி நடந்துள்ளது. உயரத்தில் வைக்கப்பட்டிருந்த பெட்டியைக் கிழே இறக்க முயன்றபோது அது, பெண்ணின் இடுப்பின் மீது வீழ்ந்துள்ளது.
பெட்டி மேலே விழுந்ததில் பாதிப்படைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிசிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26,25)

### கைபேசி...
றான முடிவு எடுத்துள்ளான் என்று கூறப்படுகின்றது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. தரம் 9இல் கற்கும் 15 வயதான மாணவனே உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-319)

### ரஞ்சன்....
லும் சூழ்ச்சியை எதிர்க்கட்சியினர் முன்னெடுத்துள்ளனர்.
இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.
எனினும் இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிராகரித்தார். அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.
நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சிறப்புக் கூற்றொன்றை எழுப்பி, சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்க தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். அப்போது அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.
ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் பேசி வருகின்றார். அண்மையில் ரஞ்சன் ராமநாயக்கவை நீதிமன்றில் சந்தித்தேன்.
அவர் கூறிய கதையைக் கேட்டதும் எனது மனம் இளகிவிட்டது. இன்று அவர் சிறையில் இருப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும், இரா.சம்பந்தனுமே காரணம் என்று அவர் என்னிடம் கூறினார்.
எனது வழக்குக்கு 103 சாட்சியாளர்கள் இருந்தனர். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரும், சம்பந்தனும் மூன்று சாட்சிகளுடன் வழக்கை முடிவுறுத்துமாறு கூறினர். சஜித் பிரேமதாசவுக்கு இனியும் துணைபோக மாட்டேன். ஜெனிவா கடிதத்தில் கையொப்பம் இடவும் மாட்டேன் என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.
உங்களுக்குத் [illegible] நான் அவரது வாக்கு[illegible] பெற்றுத் தருகின்றேன். ரஞ்சனை சிறைக்கு அனுப்பிவிட்டு, அவரது வழக்கை ஜெனிவாவுக்குக் கொண்டுசெல்ல எதிர்க்கட்சி முயற்சிக்கின்றது. சிறையில் ரஞ்சனுக்கு உணவு இல்லை, அவரைப் பார்க்கச் செல்ல எவரும் இல்லை. ஆடைகள் இல்லை.
ஆனால் நீலிக் கண்ணீர் வடித்து அவரை வைத்து அரசியல் செய்கின்றனர் என்றும் மஹிந்தானந்த குறிப்பிட்டார்.
அப்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறுவது முற்றிலும் பொய்யான கருத்து. நானும், இரா.சம்பந்தனும் இணைந்து ரஞ்சன் ராமநாயக்கவை சிறையில் அடைத்தோம் என்று அவர் கூறிய வாக்கியத்தை ஹன்சார்ட்டில் இருந்து நீக்க வேண்டும் என்றார்.
மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய அமைச்சர் மஹிந்தானந்த, நான் கூறும் விடயங்களுக்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 103 சாட்சிகள் இருக்கவில்லையா?, அதை மூன்று சாட்சியங்களுடன் முடித்துவிட கூறவில்லையா?. இந்த வழக்கில் சுமந்திரன் முன்னிலையாகவில்லையா?, சஜித் பிரேமதாச அவருக்கு அனுமதி வழங்கவில்லையா?, இதையெல்லாம் சஜித் மறுக்க முடியுமா? ரஞ்சனை சிறைக்கு அனுப்பி அவரை ஜெனிவா மனித உரிமைகள் சபைக்குக் கொண்டு செல்ல சூழ்ச்சி செய்துள்ளனர் என்று தெரிவித்தார்.
மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய சஜித் பிரேமதாச, நான் சுமந்திரனை நியமிக்கவில்லை, ரஞ்சன் ராமநாயக்கவுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவையே நியமித்தேன். சுமந்திரனை நான் நியமிக்கவே இல்லை என்று தெரிவித்தார்.
அப்போது பதிலளித்த மஹிந்தானந்த, ரஞ்சனுக்காக சுமந்திரனை நியமித்தது நீங்கள்தான் என ரஞ்சன் ராமநாயக்கவே என்னிடம் கூறினார். ஆகவே நீங்கள்தான் இந்த சூழ்ச்சியை செய்துள்ளீர்கள் என்றார். அதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ச்சியாக ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியும் அதற்குச் சபாநாயகர் செவிமடுக்கவில்லை. அதனால் சபையில் கடும் சலசலப்பு ஏற்பட்டது. (எ)

### சூத்திரதாரிகள்....
தெரிவித்துள்ளார்.
ஊடகத்துறை அமைச்சில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யார்? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
பிரதான சூத்திரதாரிகள் எவரென்பதைக் கண்டுபிடித்துள்ளோம். நௌப்பர் [illegible] ஹஜ்ஜுல் அக்பர் ஆகிய இருவருமே பிரதான சூத்திரதாரிகளாகச் செயற்பட்டுள்ளனர்.
ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் 2014 ஆம் ஆண்டு இஸ்லாமிய அரசு கோட்பாட்டை உருவாக்கினார். அவருடன் இணைந்து செயற்பட்ட நௌப்பர் மௌலவியே அந்த ஐ.எஸ். அமைப்பின் கருத்தியலை இலங்கைக்குள் கொண்டுவந்தார். அவரே சஹ்ரானுக்கு மூளைச்சலவை செய்தார். சஹ்ரான் உள்ளிட்டவர்கள் உயிரிழந்துவிட்டனர். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட 30 பேருக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கான ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 211 பேர் தடுப்புக் காவலில் உள்ளனர். இந்த விடயம் தொடர்பில் ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை. விசாரணைகள் தொடர்கின்றன. அண்மையில்கூட கைதுகள் இடம்பெற்றன.
சாரா என்பவர் உயிரிழந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்த முடியாது. முதலாவது டி.என்.ஏ. பரிசோதனையில் இது உறுதியாகவில்லை. உடற்கூற்றுகள் தோண்டப்படுகின்றன. மீண்டும் அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். சாரா என்பவர் உயிரிழந்திருக்காவிட்டால் அவர் தொடர்பான விவரங்கள் சர்வதேச பொலிஸாருக்கு வழங்கப்படும்- என்றார். (எ-44)

### மகனைத்....
துடன், அவரது மனைவியாலேயே இவர் பராமரிக்கப்பட்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

### வடக்கு...
கள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
பருத்தித்துறை மருத்துவமனையில் 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நோயாளர் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்ற 3 நோயாளர்களுக்கும், மருத்துவமனைச் சிற்றூழியர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நோயாளர் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்ற நோயாளிகள் மூவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டோருடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே சுயதனி மைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 8 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 800 அப்பாவிப் பொதுமக்கள் மியான்மரில் சுட்டுக்கொலை!

## இராணுவம் அராஜகம்



**நைபிட்டோ, ஏப்ரல் 7**
**மியான்மரில் 800 அப்பாவிப் பொதுமக்கள் அந்த நாட்டு இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.**

மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆயுத முனையில் அகற்றியது மியான்மர் இராணுவம். இதையடுத்து அங்கு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டது. அத்துடன் அடுத்த ஓராண்டுக்கு அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் இராணுவம் அறிவித்தது. இதையடுத்து இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். மக்களின் போராட்டம் இராணுவத்தால் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டு வருகின்றது. இதுவரை அங்கு சுமார் 800 பேர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

**தேவை**
தொழில் நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலையாள்கள் தேவை.
077 418 0185

**வேலையாள் தேவை**
திருநெல்வேலியில் இயங்கிவரும் சிறிய உணவகம் ஒன்றிற்கு ரொட்டி வேலை தெரிந்த ஒருவர் தேவை.
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
தொடர்பு: 076 878 3734

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 9 பரப்புக் காணிவிற்பனைக்குண்டு. 1½ பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)
தொடர்பு :
077 288 0152, 077 623 4204, 077 235 2656

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



## இராணுவத்துக்கு எதிராக மியான்மரின் அழகி குரல்

நைபிட்டோ, ஏப். 7
மியான்மர் இராணுவத்துக்கு எதிராக அந்த நாட்டின் அழகி குரல் கொடுத்துள்ளமை சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. தாய்லாந்தில் நடைபெற்ற 'மிஸ் கிராண்ட் இண்டர்நஷனல்' போட்டியில் கலந்துகொண்டு அவர் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
இன்று எனது நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக பல மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். பலர் கொல்லப்பட்டுள்ளனர். மியான்மருக்கு உதவுங்கள். சர்வதேச உதவி மியான்மருக்கு தற்போது அவசியம் தேவைப்படுகிறது. சிறந்த உலகை உருவாக்குவோம் -என்றார். (ம)


## இந்தோனேசியாவில் மழை 101 பேர் உயிரிழப்பு

யகார்தா, ஏப். 7
இந்தோனேசியாவில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக 101 பேர் உயிரிழந்துள்ளனர்.
இந்தோனேசியாவின் கிழக்கு கடலோரப் பகுதிகளில் இடைவிடாது கொட்டித் தீர்த்த கன மழையால் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளப் பெருக்குக் காரணமாக அங்கு 101 பேர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். (ம)



**31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**

மலர்வு 12 . 07 . 1944



உதிர்வு 08 . 03 . 2021

**அமரர் ஆறுமுகசாமி நாகேந்திரா**
(ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்
அனுராதபுரம், யாழ்., முல்லைத்தீவு கல்வித்திணைக்களம்)

கடந்த மார்ச் 8ஆந் திகதி எமது குடும்பத்தலைவர் அமரத்துவமடைந்த நிலையில் நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் தங்கள் சிரமம் பாராது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர், இறுதிக்கிரியைகளில் பங்கேற்றோர், தொலைபேசி ஊடாகவும், மற்றும் ஏனைய மார்க்கங்கள் ஊடாகவும் துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் உறவினர் நண்பர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமது குடும்பத்தலைவர் நோயினால் அல்லல்பட்டபோது யாழ் போதனா வைத்தியசாலையில் 10ஆம் விடுதியில் கடமையாற்றிய வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், சுகாதாரத் துறைப் பணியாளர்கள் அனைவருக்கும், அவர்களுடைய அன்பான சேவைக்கும், கவனிப்பிற்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம்.

09.04.2021 நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வரியப்புலம் மகாமாரி அம்மனின், வரியப்புலம் பூந்தோட்ட ஞானவைரவரினதும் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கின்றோம்

**காமாட்சி இல்லம்
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.
021 224 0384
077 151 0554**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ... த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.